பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 15 ஞாயிற்றுக்கிழமை (30-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:35

### உரிய சட்டத் திருத்தம் விரைவில் வருகின்றது

## அடுத்த உள்ளூராட்சித் தேர்தல் வட்டார ரீதியில் நடைபெறும்!

### மேயர், சபைத் தலைவர் நேரடியாக மக்களால் தெரிவு

கொழும்பு,டிசெ.30

மக்களின் நேரடி வாக்களிப்பு மூலம் ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தற்போதைய தேர்தல் முறை போன்று -

மாநகர மேயர்கள், நகரசபை மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோரை மக்களே நேரடியாக வாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்க வகை செய்யும் விதத்தில் உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களில் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன.

சபைகளுக்கான உறுப்பினர்களும் - முன்னைய முறை போன்று - வட்டார ரீதியில் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான ஏற்பாடுகளை புதிய அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்த ஏற்பாடுகளுக்கு இடமளிக்கும் வகையில் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத் திருத்த நகலை எதிர்வரும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முதல் சமர்ப்பிக்கும்படி அரசு சட்டமா அதிபரைக் கோரியிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்வரும் பெப்ரவரி 25ஆம் திகதிக்கும் மார்ச் முதலாம் திகதிக்கும் இடையில் நடைபெறவிருப்பது தெரிந்ததே.

அதற்கு முன்னர் இது தொடர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் துறைமுகத்தினுள் மீன்பிடிக்க கடற்படை அனுமதி

### 2 மாதங்களின் பின் வழங்கப்பட்டது

கொழும்பு,டிசெ.30

இலங்கைக் கடற்படையினரின் பலத்த பாதுகாப்புக்குக் கீழ் இருக்கும் திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் கட்டுமரங்களில் சென்று மீன்பிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களாகத் துறைமுகக் கடற்பகுதியில் மீன்பிடிப்பதற்குக் கடற்படையினர் தடைவிதித்திருந்தனர். இந்தத் தடையை நீக்கி துறைமுகக் கடற்பரப்பில் மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள அனுமதிக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் மாவட்டக் கடற்படை அதிகாரியைச் சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தனர். அதனை அடுத்தே துறைமுகத்துக்குள் மீன்பிடிக்கத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை நீக்கம் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள யுத்தநிறுத்த காலப்பகுதிக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் -

விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் பங்களிப்புக் குறித்து ஆராய ரணிலின் பிரதிநிதி அங்கு செல்கின்றார்

## அடுத்த வாரப் பிற்பகுதியில்

கொழும்பு,டிசெம்பர்30

**இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான விடயத்தில் நோர்வே வழங்கக் கூடிய பங்களிப்புக் குறித்து அந்த நாட்டுத் தலைவர்களுடன் நேரடியாகப் பேசுவதற்காகத் தமது விசேட பிரதிநிதி ஒருவரை இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்த நாட்டுக்கு அனுப்புகின்றார்.**

**புத்தாண்டு பிறந்த கையோடு - அதாவது அடுத்த வாரப் பிற்பகுதியில் - பிரதமர் ரணிலின் பிரதிநிதி நோர்வே செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நோர்வே பிரதமர் பொண்ட்விக்குக்கும் இடையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற தொலைபேசி உரையாடலில், விசேட பிரதிநிதி ஒருவரை நோர்வேக்கு அனுப்புவது குறித்து முடிவானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக மீண்டும் அனுசரணையாளராகப் பணியாற்ற முன்வருமாறு இந்தத் தொலைபேசி உரையாடலின்போது நோர்வே பிரதமருக்கு ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அழைப்பை ஒப்படைக்கவும் -

நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பான நடைமுறை ஏற்பாடுகளை (Modalities) பேசி உறுதிப்படுத்தவும் -

தான் ஒரு விசேட தூதுவரை நோர்வேக்கு அனுப்பிவைப்பதாக ரணில், நோர்வேப் பிரதமரிடம் கூறியிருந்தார். அதன்படி ரணிலின் விசேட

(14ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## புலிகளின் பிரதேசத்தில் புனரமைப்புக்கு அனுமதி

கொழும்பு,டிசெ.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிப்பதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளதாக வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு செய்தி வெளியிட்டது.

கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு, கன்னன்குடா ஆகிய கிராமங்களில் மின்சாரத் திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு கோடி 30 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கி இருந்தது.

ஆனால் இந்தப் பகுதியில் மின் இணைப்பு வேலைகளை ஆரம்பிக்க பாதுகாப்பு அமைச்சு கடந்த ஒரு வருடகாலமாக இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்க மறுத்து வந்தது.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இந்த விடயம் தொடர்பாக மின்சக்தி, எரிசக்தித்துறை அமைச்சர் கருஜெயசூரிய மற்றும் பாதுகாப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

### நான்கு நாள்களாக யுத்தநிறுத்த மீறல் ஏதுமில்லை

அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் செய்துள்ள மோதல் தவிர்ப்பு மற்றும் யுத்தநிறுத்தம் ஆகியன நடைமுறைக்கு வந்து நேற்றுடன் நான்கு நாள்களாகிவிட்டன. எனினும் யுத்தநிறுத்த மீறல் சம்பவம் ஏதும் இந்த நான்கு நாள்களில் நடைபெறவில்லை.

- இப்படி அறிவித்திருக்கின்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ண. (உ)

### மொணராகலை தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்யக் கோரி மனு

கொழும்பு,டிசெ.30

மொனராகலை மாவட்டத்தின் தேர்தல் முடிவுகளை ரத்துச் செய்து அங்கு மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும் என்று கோரி முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருமான தர்மதாஸ பண்டா கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி இந்த மாவட்டத்தில் மட்டுமே வெற்றியீட்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த மாவட்டத்தில் வாக்குச் சீட்டுகள் எண்ணப்படும்போது சுமார் 15 ஆயிரம் வாக்குச்சீட்டுகள் தவறான முறையில் நிராகரிக்கப்பட்டன என இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-6)

## யாழ். - வவுனியா தரைப்பாதை திறப்பதற்கு புலிகள் இணக்கம்?

கொழும்பு,டிசெ.30

குடாநாட்டிலிருந்து வவுனியாவுக்குத் தரைவழிப் பாதை திறப்பது தொடர்பான யோசனையை சாதகமாகப் பரிசீலிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக அவர்களுடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

சமாதானப் பேச்சுக்களுக்கான நல்லெண்ணச் சூழ்நிலையை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக -

நோர்வேயின் பங்களிப்பு மற்றும் உதவியுடன் -

இந்தப் பாதை திறக்கப்படுவதைப் புலிகள் வரவேற்பதாகக் கூறப்படுகிறது.

உத்தேச தரைவழிப் பாதையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் இரு முனைகளிலும், இராணுவப் பிரதேசம் ஆரம்பிக்கும் இடத்தில் இரண்டு வெளியகல்வுப் பாதை முனைகளைத் திறக்கப் புலிகள் விரும்புவதாகவும் கூறப்படுகின்றது. தென்முனையில் தற்போது வெளியகல்வுப் பகுதி அமைந்துள்ள பிரமணாளங்குளத்திலும் -

வடமுனையில் பளை - எழுதுமட்டுவாழ் பகுதியில் அல்லது தனங்களப்பிலும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

### தடுப்புக் காவலில் வாடும்

## தமிழ் இளைஞர், யுவதிகளை உடன் விடுதலை செய்யுங்கள்

### அமைச்சர் சந்திரசேகரன் வற்புறுத்தல்

கொழும்பு,டிசெ.30

விசாரணைகள் எதுவுமின்றி தென்பகுதிச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் டபிள்யு.ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் கோரியுள்ளார் அமைச்சர் சந்திரசேகரன்.

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு எதிராக இதுவரை குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை எனவே இவர்களை உடனடியாக விடுதலை செய்ய உத்தரவிடவேண்டும் என்றும் அவர் நீதி அமைச்சரிடம் கேட்டுள்ளார்.(ம-6)

### குடாநாட்டில் பாண் விலை அதிகரிக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.30

கோதுமை மாவின் விலை மூன்று ரூபாவால் அதிகரித்துள்ளதையடுத்து பாணின் விலை அதிகரிக்கும் நிலை தோன்றியுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் பாணின் சரியான விலை தீர்மானிக்கப்படும். யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வார்கள். (ம-4)

## தங்களது சொத்து விவரங்களை பல எம்.பிக்கள் வெளியிடவில்லை

### குற்றஞ்சாட்டுகிறார் சபாநாயகர்

கொழும்பு,டிசெ.30

இந்தமுறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் இதுவரை தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் புதிய சபாநாயகர்.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 225 உறுப்பினர்களில் ஆகப் பத்துப்பேர் மட்டுமே தமது சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட ஒருவர் அரசு விதிக்கும் கால எல்லைக்குள் தமது சொத்துக்கள் தொடர்பான விவரங்களை வெளியிடவேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### தொடரும் மழையை அடுத்து

# மரக்கறிகளின் விலை குடாநாட்டில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்துவரும் மழையினால் விவசாயச் செய்கை பாதிப்புற்றதை அடுத்து சகல இடங்களிலும் காய்கறிகளின் விலை திடீரென உயர்ந்துள்ளது.

உருளைக்கிழங்கு கிலோ 200 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 140 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 130 ரூபாவாகவும், தக்காளி கிலோ 100 ரூபாவாகவும், கரட் கிலோ 120 ரூபாவாகவும், லீக்ஸ் கிலோ 200 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ 30 ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 120 ரூபாவாகவும் திருநெல்வேலிச் சந்தையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

இதேவேளை -

தேங்காய் ரூபா 30 தொடக்கம் ரூபா 40 வரையிலும் விலை ஏறியுள்ளது.

அண்மையில் 7ரூபா விற்ற முட்டை தற்போது 10 ரூபா விற்கப்படுகிறது. எல்லாப் பொருள்களும் யானை விலை, குதிரை விலை விற்பதினால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

(ம-180)

# டாக்டர் தெய்வேந்திரன் தொடர்பான விசாரணை குறித்து மேலதிக விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

"டாக்டர் தெய்வேந்திரனின் நடவடிக்கை பற்றி விசாரணை" - என்ற தலைப்பில் கடந்த 27-12-2001 திகதிய உதயனின் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள செய்தி குறித்து டாக்டர் தெய்வேந்திரன் உதயனுடன் தொடர்புகொண்டு தமது ஆட்சேபனையைத் தெரியப்படுத்தியுள்ளார்:

"யாழ்.மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர்.தெய்வேந்திரனின் அண்மைக்காலச் செயற்பாடுகள் தொடர்பாக மாகாணக் காணி ஆணையாளரும் பிரதிச் செயலாளருமான தியாகலிங்கம் அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்து பலரின் வாக்குமூலங்களைப் பெற்றுச் சென்றுள்ளார்" - என்று உதயன் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாகப் பின்வரும் விடயங்களை தெரிவிக்கவிரும்புகின்றோம்:-

யாழ்ப்பாண மாநகரசபையிலிருந்து தாம் இடம்மாற்றம் செய்யப்பட்டமை குறித்து டாக்டர் தெய்வேந்திரன் பல விண்ணப்பங்களை வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பியிருந்தார்.

நடந்த விசாரணைகளை டாக்டர் தெய்வேந்திரன் ஆட்சேபிப்பதாகவும் -

அதன் பின்னர் முறைகேடுகள் நடந்திருப்பதாக அவர் குறிப்பிடுவதாகவும் -

தமக்குத் தென்படுவதாக ஆளுநர் கருதியதால் புதிய விசாரணைகளுக்கு உத்தரவிட்டார்.

அந்த விசாரணைகளே அண்மையில் நடைபெற்றிருக்கின்றன.

இந்த விவரம் கடந்த 27-12-2001 'உதயன்' செய்தியில் இடம்பெறாததால் டாக்டர் தெய்வேந்திரனுக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்குமானால் அதற்காக வருந்துகின்றோம்.(ஆ-ர்)

### ஈழத்துச் சிதம்பரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மத்தியில் நேற்றுக் காலை பஞ்சரதபவனி இடம்பெற்றது.

காரைநகர், கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்த பின்னர் முதற்தடவையாக நேற்றே பொதுமக்கள் பாஸ் அனுமதி இன்றி காரைநகருக்குள் அனுமதிக்கப்பட்டனர். இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆலயத்தில் நின்று உற்சவ ஒழுங்குகளை மேற்கொண்டார். தேரத் திருவிழா நிகழ்ச்சி நேற்றுக் காலை இலங்கை வானொலி தேசிய சேவை, யாழ்சேவை என்பவற்றில் நேரடி ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

(ம-73)

### ரூ.13 லட்சம் செலவில்

# 43 சனசமூக நிலையங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள்

## நல்லூர் பிரதேச சபை வழங்குகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.30

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 43 சனசமூக நிலையங்களுக்கு 13 லட்சம் ரூபா செலவில் தொலைக்காட்சிப் பெட்டிகளை பிரதேச சபை வழங்கி வருகின்றது.

இந்த 43 தொலைக்காட்சிப் பெட்டிகளில் 10 ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதாகவும் -

ஏனையவை நேற்றுத் தொடக்கம் அந்தந்த சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டு வருவதாகவும் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த 43 தொலைக்காட்சிப் பெட்டிகளுக்குமான நிதி முன்னாள் வடக்கு புனரமைப்பு, புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-180)

# நான் ஊழியர் சிலரை இடைநிறுத்தப் பணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையில் பணியாற்றி வருகின்ற ஒரு சில ஊழியர்களை உடனடியாகப் பணியில் இருந்து நிறுத்துமாறு அதன் தலைவரினால் யாழ்.அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் குறிப்பிட்ட அந்த ஊழியர்களுக்கு ஒரு மாதத்துக்குரிய சம்பளப் பணத்தை வழங்கி அவர்களை நிறுத்துவதற்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம-10)

# குழந்தைகளுக்கான மருந்து பெறுவதில் பெரும் சிரமம்

அச்சுவேலி,டிசெ.30

யாழ்.குடாநாட்டில் குழந்தைப்பிள்ளைகளுக்கான நோய் தடை மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

குழந்தை பிறந்ததினத்தில் இருந்து குறித்து ஒதுக்கப்பட்ட நாள்களில் படிமுறையாக, தொற்றுநோய்களுக்கான தடைமருந்துகள் ஊசி மூலமும், சொட்டுமருந்தாகவும் வழங்கப்படவேண்டும்.

போலியோ, காசநோய், முக்கூட்டுத் தடை மருந்து என்பன உரிய காலப்பகுதியில் கொடுக்கப்படவேண்டும். உரிய காலப்பகுதியில் மருந்துகள் கொடுக்கப்படாவிடில் குழந்தைகள் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு உள்ளாகி பெரும் பாதிப்படைவர்.

மேற்படி தடை மருந்துகள் வாரந்தோறும் கிராம மட்டத்தில் வைத்தியசாலைகளிலும், அரசாங்க மருந்தகங்களிலும் வழங்கப்பட்டு வந்தன. ஆனால் இந்த மாதத்தில் இத்தகைய பெருமளவான தடை மருந்து விநியோக நிலையங்களில் குழந்தைகளுக்கான தடை மருந்து வழங்கல் சீராக நடைபெறவில்லை எனக் கூறப்படுகிறது.

பெரும்பாலான நிலையங்களில் தாய்மார் நீண்டநேரம் காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடு திரும்பியதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

சில தடை மருந்துகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும், சில தடை மருந்துகள் முற்றாகவும் வழங்கப்படாமையினால் பெரும்பாலான தாய்மார்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு பிள்ளைகளைக் கொண்டு சென்று நோய்த் தடை மருந்துகளை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

(ம-11)

### 8 கோடி பெறுமதியான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

கொழும்பு,டிசெ.30

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்தும் இந்த வருடத்தில் மட்டும் எட்டுக்கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலீஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

### மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில்

# மணல் ஏற்றுவதற்கு எதிராக மக்கள் நேற்று மறியல் போர்

யாழ்ப்பாணம்,டிசெ.30

மணற்காடு மற்றும் குடத்தனைப் பகுதிகளில் இருந்து மணல் ஏற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் மறியல் போராட்டம் நடத்தினர்.

மணல் ஏற்றுவதற்காகச் சென்ற வாகனங்களை வழிமறித்தே மக்கள் இந்த மறியல் போராட்டத்தை நடத்தினர்.

இதனையடுத்து மணல் ஏற்றுவதற்குப் படையினர் தற்காலிகமாகத் தடை விதித்தனர். இந்தப் பிரச்சினை குறித்து ஊர்ப்பொது மக்களுடன் பேசி இது தொடர்பாகத் தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்கும்படி மருதங்கேணி உதவி அரச அதிபரிடமும் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கடந்த பல வருடங்களாக குடாநாட்டுக் கட்டடப் பணிகளுக்குத் தேவையான மணல் இப்பகுதிகளிலிருந்து பெறப்பட்டு வருகின்றது.

இதனால் இப்பகுதிகள் தாழ்ந்த பிரதேசமாக மாறுவதுடன் அங்குள்ள நன்னீர் கிணறுகளும் உவர்த்தன்மை கொண்டவையாக மாறி வருகின்றன என்று அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை என்றும் அவர்கள் குறைப்பட்டுக்கொள்கின்றனர்.

இதனைப் பொறுக்க முடியாமலும் இனிவரும் காலங்களில் மணல் ஏற்றுவதைத் தடுப்பதற்காகவுமே தாம் இந்த மறியல் போராட்டத்தை நடத்தியதாக அதில் கலந்துகொண்ட ஒருவர் தெரிவித்தார்.

(ம-8-10)

# மேலும் இரு பாடசாலைகள் சொந்த இடத்தில் இயங்கும்

தென்மராட்சிப் பிரதேசத்தில் மேலும் இரு பாடசாலைகள் சொந்த இடங்களில் ஜனவரிமுதல் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மிருசுவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுமே மீண்டும் சொந்த இடங்களில் இயங்கவுள்ளவையாகும்.

இடம்பெயர்ந்த வேறு ஏழு பாடசாலைகள் ஏற்கனவே ஜனவரி முதல் மீண்டும் சொந்த இடங்களில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீண்டும் இயங்கவுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும், மீளக் குடியமர்ந்த மாணவர்கள் தத்தமது பாடசாலை அதிபர்களிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-117)

# 2002 - சமாதான ஆண்டா?

**அ.கு. சண்முகரத்தினம்**
*சங்கானைச் சோதிடர்*

**கடந்த 24.11.2001 தொடக்கம் 06.01.2002 வரை கிரகநிலை**

மே இட

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | சனி | ரா வி |
| ல / செ | 1ஆவது கிரக நிலை அட்டவணை | | 6 |
| 12 | | | 7 |
| கே | சூரி | 9 | 8 |

மேற்படி அட்டவணையை நோக்குங்கள். முதலாவது அட்டவணையில் குறிப்பிட்ட காலப் பகுதியான 24.11.2001 தொடக்கம் 6.01.2002 வரை இலங்கையில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பும், ஆட்சி மாற்றமும், படுகொலைகளும் பதற்ற நிலையும் ஏற்படக்கூடிய நிலையே இருந்து கொண்டுள்ளது. இதற்கு சோதிடரீதியாக இடபராசியிலுள்ள சனியை செவ்வாயும், சூரியனும் நோக்கியதாலேயே ஏற்பட்ட பலனாகக் கருத வேண்டும்.

இதேபோல 2ஆவது கிரகநிலை அட்டவணையில் காட்டப்பட்ட பிரகாரம் 25.01.2002இல் ராகு கேது மாற்றம் ராகு, சனியுடன் இடபராசியில் சேருகிறார். அதன் பின்பு 31.03.2002இல் செவ்வாயும் சனி, ராகுவுடன் சேருவார். மேலும் சனி, செவ்வாய், ராகு மூவரும் இடபராசியிலிருக்கும் போது எரிகிற வீட்டில் எண்ணெய் ஊற்றியது போல 15.05.2002இல் சூரியனும் சேருகிறார். மொத்தமாக இடபராசியில் நான்கு கிரகங்களும் 15.05.2002இன் மேல் 15.06.2002 வரை நாட்டுக்கு ஆகக்கூடிய துன்பத்தை எந்தவகையில் கொடுக்க முடியுமோ அந்தவகையில் யுத்தம், கலகம் மற்றும் அரசியல் கொந்தளிப்பு என்பன நடக்கக்கூடிய சூழ்நிலையே உருவாகும்.

இலங்கை இராசிப் பிரமாணப்படி நம் முன்னோர்களால் கணிக்கப்பட்டதும் சாதக அலங்காரத்தில் உறுதியாகச் சொல்லப்பட்டதுமான இலங்கை லக்கினமான கும்பலக்கினாதிபதி 4ஆம் வீடான பூமி, நிலம் என்று சொல்லப்படும் இடமான இடபராசியில் செவ்வாய், ராகு, சூரியனுடன் சேர்க்கைப்படும் காலம் பூமிக்கான யுத்தம் ஏற்படக்கூடிய நிலையே உண்டு. இந்த நிலையில் கும்ப லக்கினத்திற்கு 3அதிபதி சகோதரகாரகன் செவ்வாய்(தமிழர்களுக்குப் பொறுப்பானவன்) சிங்களவர்களுக்கு பொறுப்பான ச்னியுடன் கூடி இருப்பதுடன் ராகு, சூரியனுடன் கூடி இருப்பதாலும் பாரிய யுத்த நிலையைத் தாண்டி

**25.1.2002 தொடக்கம் 15.6.2002 வரை கிரக நிலை**

| | | | |
|---|---|---|---|
| 2 | மே 3 | இட சனி ரா சூரி செ | வீ. |
| ல | 2ஆவது கிரக நிலை அட்டவணை | | 6 |
| 12 | | | 7 |
| 11 | கே 10 | 9 | 8 |

சமாதான வழிக்குத் திரும்ப 16.06.2002 இன் மேல்தான் பலனுண்டு.

மேற்சொல்லிய காலப் பகுதியில் அயல்நாடான இந்தியாவிலும் போர் சூழ்நிலை ஏற்படும். ஆனாலும் 6.01.2002 இன் மேல் 31.03.2002 வரை அமைதியான போக்கு மாதிரி காலம் கடந்து செல்லும்.

அரசு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை இக்காலப் பகுதியில் நடத்துவது பேரழிவைத் தரும்.

குறிப்பாக இக்காலப் பகுதியில் மேடம், இடபம், மிதுனம் மற்றும் விருச்சிகம், துலாம் இராசிக்காரர்கள் மிக அவதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அரசியல்வாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்கியிருப்பது நல்லது.

★

# சனசமூக நிலையங்களின் சமாசத்தை இயக்க முயற்சி

சண்டிலிப்பாய்,டிசெ.30

கடந்த இரு வருடகாலமாக செயலிழந்த நிலையில் இருந்து வரும் யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தை மீண்டும் புனரமைத்து சிறப்பான முறையில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கையை யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி மேற்கொண்டு வருகின்றார்.

இதன்பொருட்டு 2002ஆம் ஆண்டில் யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் செயற்பாட்டை வலுப்படுத்துமுகமாக சனசமூக நிலையம் ஒவ்வொன்றும் தமது நிர்வாக சபையை கூட்டி, சமாசத்துக்கென ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்து தமது பிரிவுப் பிரதேச சபை மற்றும் நகரசபை ஆகியவற்றுக்கு அதன் விவரத்தை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியின் பெயர், அவரது முகவரி மற்றும் அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களை எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர் ஆகியோருக்கு இவ்வாரம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(ம-135)

## உதயன்

### வழமை நிலை திரும்ப வழிசமைப்போம்!

இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையில் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான ஏற்பாட்டாளராகப் பணியாற்றும்படி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு விடுத்த அழைப்பை நோர்வே ஏற்றுக்கொண்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பிடமிருந்து ஆக்கபூர்வமான பதிலைத் தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக நோர்வேத் தரப்பு தெரிவித்திருக்கின்றது.

ஒரு நல்லெண்ணப் புறச்சூழ்நிலையில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தத் தயார் என்று விடுதலைப் புலிகள் திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார்கள். அதற்கு நோர்வே போன்ற மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் - அனுசரணை - ஏற்புடையது என்றும் புலிகள் தெட்டத் தெளிவாகத் தெரிவித்திருந்தனர்.

எனவே இப்போதும் நோர்வேயின் ஏற்பாட்டாளர் பங்களிப்பை ஏற்றுக்கொள்வதில் புலிகள் தரப்பில் தயக்கம் ஏதும் இருக்கும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை.

கடந்த ஆண்டுகளில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்போவதாக சர்வதேச உலகுக்கு அப்போதைய சந்திரிகா அரசு பாசாங்கு காட்டிய சமயத்தில்கூட, அந்த அரசும் நோர்வேயின் உதவியையே நாடுவதாக வெளியில் காட்டிக்கொண்டது. நோர்வேயும் முழுமூச்சாக ஒத்துழைத்தது. புலிகள் தரப்பும் சமாதானப் பேச்சில் இயல்பாகவே தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தும் விதத்தில் மிகத் தெளிவாக நடந்துகொண்டது.

ஆனால் போர் மூர்க்கத்தில் நின்ற சந்திரிகா அரசு, இந்தவிடயத்தில் நோர்வேயின் விசேட தூதுவராகச் செயற்பட்ட எரிக் சொல்ஹெய்மை ஒரேயடியாக ஓரங்கட்ட முயற்சித்ததன் மூலம் சமாதான நடவடிக்கைகளையே செயலிழக்கவைத்தது.

இப்போது ரணில் தலைமையிலான புதிய அரசுத் தரப்பிடம் இருந்தும் புலிகளிடம் இருந்தும் ஏற்பாட்டாளராகச் செயற்படவிருக்கும் நோர்வேயிடம் இருந்தும் நல்ல சமிக்ஞைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அவை பயனுள்ள தீர்வுக்கு வழிசமைப்பனவாக இருக்கவேண்டும் என்பதே நாட்டு மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுதல் - அதற்கான பேச்சுக்களில் ஈடுபடமுன்னர் - அந்தப் பேச்சுக்கு நல்ல அடித்தளம் இடும் வகையில் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பது நல்லது என்பதை இலங்கைப் பிரதமர் ரணிலும் அப்படியே ஒப்புக்கொண்டிருக்கின்றார். சமாதான முயற்சிகள் தொடர்பாக புலிகளின் எதிர்பார்ப்பை அவர் நன்கு புரிந்துவைத்துள்ளார் என்பதையே இது காட்டுகின்றது.

எனவே இருதரப்பும் இப்போது அவசரமாக - அவசியமாக - கவனிக்க வேண்டிய விவகாரம் அன்றாடப் பிரச்சினைகளுக்குச் சுமுகத் தீர்வு காண்பதாகும். இதுவிடயத்தில் நோர்வேயின் பங்களிப்பை உரியமுறையில் பயன்படுத்துவதில்தான் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களின் போக்கு அமையும் என்பது திண்ணம்.

பொருளாதாரத் தடைகளை நீக்குதல், இராணுவக் கெடுபிடிகளை அகற்றுதல், மீன்பிடிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல், வடக்கிற்கு தரைவழிப் பாதை ஒன்றைத் திறத்தல் என்பன உடன் தீர்வுகாணப் படவேண்டிய அன்றாடப் பிரச்சினைகளில் முக்கியமானவை.

அவற்றைச் செய்வதில் இருதரப்பும் முனைப்புடன் ஈடுபடுவது அவசியமாகும்.

பெயரளவில் பொருளாதாரத் தடைகளை நீக்கினால் மட்டும் போதாது. செயல்வடிவத்திலும் இந்தப் பொருள்கள் வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்திற்குச் சென்றடைய வேண்டும்.

அரசு நிறுவனங்கள், ப.நோ.கூ. சங்கங்கள் போன்ற பொது அமைப்புகள் மட்டுமல்லாமல், தனியாரும் அதிகளவில் பொருள்களை வன்னிக்கும், குடாநாட்டுக்கும், மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கும் எடுத்துச்சென்றால்தான் அந்தப் பிரதேசங்களில் மக்களின் வாழ்க்கைநிலை வழமைக்குத் திரும்பும். இந்த வகையில் -

வழமைநிலை திரும்புவதற்கான ஏற்பாடுகளை - முன்முயற்சிகளை - எடுப்பதில் அரசுத் தரப்புக்கு மட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கும் பொறுப்புள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

---

சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிக்க

# பொதுமன்னிப்புக் காலம் ஜனவரி 1 முதல் 15 வரையும்!

கொழும்பு,டிசெ.30

அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கிகள், வெடிமருந்துப் பொருள்கள் ஆகியவற்றை ஒப்படைப்பதற்கான பொதுமன்னிப்புக் காலம் குறித்து அரசு அறிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதிமுதல் 15ஆம் திகதிவரையில் இந்த மன்னிப்பு வழங்கப்படும்.

சட்டவிரோத ஆயுதங்கள், வெடிமருந்துகள் வைத்திருப்போர் அவற்றை குறிப்பிட்ட காலத்துக்குள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கவேண்டும்.

ஜனவரி 15ஆம் திகதிக்கு பின்னர் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்போருக்கு எதிராக நடவடிக்கையெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

(க)

---

## நாட்டு நடப்பு

**கப்பலைக் காத்திருக்கலாமோ?**

கப்பலில் பண்டமேற்றி கடல் தனை கடந்து சென்று
செப்பரும் வணிகம் செய்தான் சீரெலாம் கொணர்ந்து சேர்த்தான்
இப்போ கப்பலை காத்த வண்ணம் கரையினில் கிடந்துகொண்டு
உப்பு மா எண்ணையின்றி உழல்கிறான் பசியால் வாடி.

★ ★ ★

அப்புவும் ஆச்சியுமன்று அடிபட்டு கியூவில் நின்றோ
உப்பொடு அரிசி வாங்கி வந்து உலையினில் போட்டார் அப்போ?
தப்பெலாம் எங்கள் மேல்தான் தரணியில் எம்மைப்போல
கப்பலோடியவன் எங்கும் கடற்கரையில் தவம் கிடந்ததுண்டோ?

*- விகடகவி.*

---

# பாதீனியம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

## இன்று கோண்டாவிலில் நடக்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.குடாநாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் பாதீனியத்தின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்குகொன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோணடாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் நடத்துவதற்குத் யாழ்.உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கருத்தரங்கில் விவசாயத் திணைக்கள உத்தியோகஸ்த்தர்களும், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர். இக்கருத்தரங்கினைத் தொடர்ந்து, கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயப் பகுதியில் உள்ள பாதீனியக் களைகளைப் பிடுங்கி அழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கிலும் தொடர்ந்து நடைபெறும் சிரமதானத்திலும் விவசாயிகளையும், பொதுமக்களையும் கலந்துகொண்டு பாதீனியத்தை அழிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை கேட்டுள்ளார்.

(ஐ-8)

### ஆலோசனை கூட்டம்

சாவற்காட்டுப் பகுதியில் இரண்டு முன்பள்ளி பாலர் பாடசாலைகள் முழுமையாக இயங்கும் போது மூன்றாவது முன்பள்ளியை இயங்க அனுமதிப்பது தொடர்பாக பிரதேச சபை நிர்வாகம் ஆராயவுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கல்வியதிகாரிகள், பிரதேச செயலர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள பிரதேச சபைச் செயலர் பி.விக்டர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கான கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறும்.

(ஐ-185)

---

# தமிழர் வரலாற்றுப் பொக்கிஷங்களை பேணிக்காத்த பெருந்தகை கலைஞானி

## இறுதி அஞ்சலி நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.30

தமிழர் வரலாற்று ஆவணங்களைப் பேணிக்காத்த உண்மைத் தமிழன் பெருந்தகை கலைஞானி அ.செல்வரத்தினம்.

- இவ்வாறு கூறினார் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.

மாமனிதர் அ.செல்வரத்தினத்தினத்தின் இறுதி அஞ்சலி நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை நல்லூர் மருதடி வீதியில் உள்ள அவரது உறவினர் இல்லத்தில் நடைபெற்றது. அங்கு பலர் அஞ்சலியுரையாற்றினர்.

ஆறு.திருமுருகன் தனது அஞ்சலியுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கலைஞானியின் இழப்பு தமிழர் தேசத்துக்கே பேரிழப்பாகும். அதேவேளை, ஈழத்தமிழர்களின் வரலாற்றுப பொக்கிஷங்களின் உற்றுதுணைமிக்க தோழன் ஒருவன் மறைந்துவிட்டான்.

பாரதியின் மரணச்சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் மிகவும் சிறிய தொகையினரே கலந்துகொண்டனர். ஆனால் அதன்பின்னரே தமிழ்ப் புலவர் பாரதியின் புகழ் உலகனைத்தும் பரவிக்கொண்டது.

அதேபோலவே, கலைஞானியின் இறுதிக்கிரியைகளிலும் குறிப்பிட்ட சிலரே கலந்துகொண்டுள்ளனர். எனவே கலைஞானியின் மறைவுச் செய்தியும், அவரது பணிகளும் உலகனைத்தும் பரவுவதற்கு இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோர் அயராது உழைக்கவேண்டும்.

கலைஞானி தமிழ் மக்களின் சொத்து, தமிழர் வரலாற்றுப் பொக்கிஷங்களின் காவலன். தமிழ் மக்களின் வரலாறுகள் திரித்துக் கூறப்படும் சந்தர்ப்பத்திலெல்லாம் அவற்றுக்கு எதிராகக் குரல்கொடுத்து வதாடுகின்ற ஒருவராக விளங்கிய இவர், தனக்காக எதையும் தேடவில்லை. மண்ணுக்காகவே வாழ்ந்து மண்ணுக்காவே மரணித்துவிட்டார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்று ஆய்வாளர்களுக்கு ஒரு முன்னோடியாக கலைஞானி திகழ்ந்தார். அவர் தனது வாணாளை அர்ப்பணித்து மிகப பழைமைவாய்ந்த ஈழத் தமிழர் வரலாற்றை ஆதாரங்களோடு பேணுகின்ற பணியை நீண்டகாலமாக மேற்கொண்டுவந்தார்.

தமிழர்களுக்கும் அவர்தம் பொக்கிஷங்களுக்கும் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடி நிலை ஏற்பட்டபோது மனம் பொறுக்காத அவர், பத்திரிகைகள் வாயிலாக பல கருத்துக்களை வெளியிட்டு தனது வாதங்களை முன்வைத்தார்.

தேசப்பற்றுடையவராக வாழ்ந்த கலைஞானி, என்றும் நினைவுகூரப்படவேண்டியவர் என்றார்.

மாமனிதர் கலைஞானி அருங்காட்சியத்தின் இயக்குநர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தனது அஞ்சலியுரையில்:-

தமிழர் வரலாற்றைத் தேடி அலைந்த கலைஞானி இம் மண்ணின் மாபெரும் சொத்து. அவர் விட்ட பணிகளைத் தொடர நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன். தனக்கென வாழாது பிறர்க்காக வாழ்ந்த மாமனிதரை எம் மண் இலகுவில் மறந்துவிட முடியாது.

கலைஞானி ஆற்றிய சேவை இம் மண் உள்ளவரை நினைவுகூரப்பட்டுக்கொண்டே இருக்கும். பல தமிழ் அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த கலைஞானி அவர்கள், தமிழ்த் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுடனும், மாமனிதர் குமார் பொன்னம்பலத்துடனும் நெருங்கியவராக இருந்தார் - என்றார்.

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.சி.நடராஜா அஞ்சலியுரை நிகழ்த்துகையில்:-

தொல்பொருளைச் சேகரித்துக் காப்பாற்றிய குரும்பசிட்டி மண்ணின் மூத்த கலைஞர் கலைஞானி அவர்களின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது. அவரின் அருந்தேடல்கள் தமிழ்ச் சமூகத்தால் காப்பாற்றப்பட வேண்டும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம் - என்றார்.

(ஐ-7-9)

---

### நவாலி வடக்கில் திருட்டுக்கள் அதிகரிப்பு!

வலி.தென்மேற்கு,டிசெ.30

நவாலி வடக்கு - புலவர் வீதியில் நள்ளிரவு வேளையில் திருடர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு புலவர் வீதியில் உள்ள இரண்டு வீடுகளில் தேங்காய், கோழி மற்றும் பாத்திரங்கள் திருடப்பட்டுள்ளன.

திருட்டுக்களைத் தடுக்க நவாலி வடக்கு சனசமூக நிலையமும், இளைஞர் வட்டமும் ஏற்கனவே இங்கு விழிப்புக் குழுக்களை அமைத்துள்ளன.

(ஐ-185)

---

புலிகளுடன் இணக்கம் காணப்படும் வரை

# உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் வடக்கு - கிழக்கில் இல்லை

உள்ளூராட்சிச் சபைகளுக்கு எதிர்வரும் பெப்ரவரிமாத இறுதியில் தேர்தல் நடக்கும் சமயத்தில் வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போது இல்லை. சமாதானப்பேச்சைத் தொடங்கி இருசாராருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டபின்னர் தேர்தலை நடத்தவேண்டும் என்று பல அமைச்சர்கள் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

இணக்கப்பாடு ஏற்பட்டபின்னர் விடுதலைப் புலிகளின் விருப்பத்துடன் வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தலாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்டவர்களுக்கு கூறியுள்ளதாக அறியவந்தது.

எதிர்வரும் பெப்ரவரியில் வடக்கு - கிழக்கில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளைக் கலைத்து, விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது என்று அரசு முடிவுசெய்துள்ளது.

(ஐ-3)

### சிறார்களுக்கு பரிசளிப்பு

யாழ். கில்னர் லேன் மகாமாரியம்மன் ஆலயத்தில் திருவெம்பாவைக் காலத்தில் தினசரி அதிகாலை 5 மணிக்கு நடைபெற்ற திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை வீதி பஜனையில் பங்குகொண்ட இளஞ்சிறார்களுக்கு இன்று ஞாயிறு மாலை 5 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

(ஐ)

---

**நாளை**

மார்கழி 16
திங்கட்கிழமை
திதி : பிரதமை
பிற்பகல் 3.37 வரை.
நட்சத்திரம்: புநர்பூசம்
பின்னிரவு 1.10 வரை.
சுபநேரம் : 12.29 - 01.59
ராகுகாலம் : 7.59 - 9.29
(பழைய நேரப்படி)

---

**உதயவாக்கு**

நாணயமற்ற வியாபாரி, நேர்மையில்லாத அரசியல்வாதி, ஒழுக்கமில்லாத சீர்திருத்தவாதி, உண்மையல்லாத எழுத்தாளி, கொள்கையில்லாத பேச்சாளி, அறிவில்லாத படிப்பாளி ஆகிய அறுவரும் நாட்டை அரித்து அழித்துவிடும் கறையான்கள் ஆவர்.

---

# கூட்டுறவுச் சங்கக் கிளை முகாமையாளரை வீதியில் மறித்து பணம் கொள்ளை!

தென்மராட்சி,டிசெ.30

சங்கக் கிளைக் கடையில் வியாபாரத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய கிளை முகாமையாளரை வழிமறித்த இருவர் கத்தியைக் காட்டி அவர் வைத்திருந்த வியாபாரப் பணத்தையும், அவர் அணிந்திருந்த தங்க மோதிரத்தையும் அபகரித்தனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன்று கரவெட்டி முடக்காடு என்னும் இடத்தில் இடம்பெற்றது.

கட்டைவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கரவெட்டி மத்திக கிளையின் முகாமையாளரிடமிருந்தே பணமும், நகையும் அபகரிக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார்.(ஐ-117)

### 'கோபுரம்' சஞ்சிகை வெளியீடு

இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் 'கோபுரம்' சஞ்சிகையின் கார்த்திகை மாத இதழ் வெளியிடப்பட்டுள்ளது.

கோபுரம் இதழைப் பெறவிரும்புவோர் தமது திணைக்களத்துடன் கடிதம் மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

(ஐ-7)

# ஒப்பந்த அடிப்படை மருத்துவர்கள் பணியிலிருந்து விலகுவதாக அறிவிப்பு!

## சில சிகிச்சைப் பிரிவுகள் ஸ்தம்பிக்கும் நிலை

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் தமது பணியிலிருந்து விலகப் போவதாக அறிவித்துள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது என்றும் -

ஓய்வூதியம் பெறாமல் ஒப்பந்த ஊதியத்தை மட்டும் பெற்றுப் பணியாற்ற விரும்புபவர்கள் தொடர்ந்து பணியாற்றலாம் என்றும்-

சுகாதார அமைச்சினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் காரணமாகவே தமது பணியில் இருந்து விலகுவதாக காது, மூக்கு, தொண்டை வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர், சட்ட வைத்திய அதிகாரி, மயக்க மருந்து ஏற்றும் நிபுணர் மற்றும் யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவரும் இவர்கள் ஜனவரி மாதத்திலிருந்து தத்தமது பணிகளில் இருந்து விலகிக்கொள்வதால் யாழ். மருத்துவமனையில் அதிமுக்கியமான சிகிச்சைப்பிரிவுகள் முடங்கிவிடும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-10-139)

---

### பொருளியல் துறையின்
### சஞ்சிகை வெளியீட்டு விழா அழைப்பு

*இடம்* - நூலக கேட்போர் கூடம்
(யாழ்.பல்கலைக்கழகம்)

*காலம்* - நாளை (31.12.2001) திங்கட்கிழமை

*நேரம்* - பிற்பகல் 3.00 மணி (புதியநேரம்)

**சஞ்சிகை - அபிவிருத்தி பொருளியல் இதழ் 2**

*தலைவர்* - செல்வன் இ.சசிகுமார்
*(தலைவர், இளம் பொருளியலாளர் மன்றம்)*

*பிரதமவிருந்தினர்* - பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
*(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)*

*சிறப்பு விருந்தினர்* - பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர்
*(பீடாதிபதி - கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இளம் பொருளியலாளர் மன்றம்,
பொருளியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

(96472)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 21 - 09 - 1931 | 30 - 11 - 2001 |

### அமரர் ஆறுமுகம் வைரமுத்து

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
விளங்கிய அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து
மாதம் ஒன்று கடந்த போதும் உங்கள்
நினைவுகள் எம்மைவிட்டு என்றென்றும் நீங்காது!
ஆத்மா சாந்தி அடைவதாக!

*மாளியாவத்தை, சங்கானை.* (C/20057) - குடும்பத்தினர்.

---

## 33ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 03 - 1923 | 27 - 11 - 2001 |

### அமரர் இளையதம்பி நாகலிங்கம்

*(இளைப்பாறிய ஆசிரியர், யா/அருணோதயாக் கல்லூரி)*

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்கள்
ஆத்மா சாந்தி அடைவதாக!

27-11-2001ஆம் திகதி வத்தளை கொழும்பில் இறைபதம் எய்திய எமது அன்புத் தந்தையின் மறைவுச்செய்திகேட்டு, உடன் வந்து எமக்கு ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

*இன்று (30-12-2001)* ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் நடைபெறும் அமரரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தற்காலிக முகவரி:*
*துளசி ஒழுங்கை,*
*83/7, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
புலிக்கிட்டங்கி, கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்.

(96471)

---

### திருவாதிரை உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

கந்தர்மடம், ஆத்திசூடி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் இன்று காலை 8.30 மணிக்கு திருவாதிரை உற்சவம் இடம்பெறும்.

அதனையொட்டி அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம் என்பன இடம்பெறும். (ஐ-9)

★ ★ ★

சண்டிலிப்பாய் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் திருவாதிரையை முன்னிட்டு இன்று காலை அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பறத்தில் மாணிக்கவாசகர் பெருமானின் திருவுருவப்படம் வீதியுலாவரும் நிகழ்வு இடம்பெறும். (ஐ-7-17)

★ ★ ★

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞான வைரவர் ஆலயத்தில் திருவாதிரை பூஜையை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வைரவர் பெருமானின் திருவீதியுலா நடைபெறும்.

பூஞ்சப்பறத்தில் வைரவப்பெருமான் எழுந்தருளி ஈச்சமோட்டை வதி, கடற்கரை வீதி, கொய்யாத்தோட்டம் வீதி, பழைய பூங்கா வீதி, கொழும்புத்துறை வீதி, பூங்கன்குளம் வீதியூடாக மீண்டும் ஈச்சமோட்டையைச் சென்றடைவார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-17)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் இன்று திருவாதிரையை முன்னிட்டு காலை 9.30 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் பூஜைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து நடராஜப் பெருமானின் வீதியுலா இடம்பெறும். (ஐ-7-17)

---

### வீதி திருத்தப்படவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.30

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பழைய வீதி கடந்த 20 வருடங்களாக திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மானிப்பாய், வட்டுக்கோட்டை, மூளாய் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் பெரும்பாலான மக்கள் இவ்வீதியூடாக பயணம் செய்வதாகவும் -

அண்மையில் பெய்த மழையினால் வீதியிலுள்ள குழிகளில் வெள்ளம் நிரம்பியிருப்பதாகவும் -

இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் விபத்துக்களையும் சந்திக்க நேரிடுவதாகவும் -

தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியைத் திருத்தி அமைக்குமாறு இப்பகுதி மக்கள் யாழ்.மாநகர சபைக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவித்தனர். (ம-4-ரி)

---

### தையல் வேலைக்கு ஆள் தேவை

பெண்களின் உடைகள் வெட்டித் தைக்கக் கூடிய பெண்கள் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு:- பானு காமென்ஸ்,
11, பிறவுண் வீதி,
(நாவலர் வீதிக்கு அண்மையில்),
யாழ்ப்பாணம்.

(96462)

---

# வெளிநாடுகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள மாணவருக்கு வசதி

யாழ்ப்பாணம்,டிசெ.30

கல்வி உயர்கல்வி அமைச்சு சீனா, ஜப்பான், ரஷ்யா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

மேற்படி பட்டப்படிப்புக்கு விண்ணப்பிப்போர் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன், ஆங்கிலமொழியில் உயர்ந்த அறிவுடையவராக இருக்கவேண்டும். நல்ல தேகஆரோக்கியம் உடையவர்களாகவும் இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் புலமைப்பரிசில்களுக்கென விண்ணப்பிப்போர் கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட நாடுகளின் தூதரகங்களினால் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான விவரங்கள் நேற்றுமுன்தினம் வெளிவிக்கழமை வெளியான அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ் எப்போர்ஸ் ஸ்போட்'டில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஐ-7)

---

## தேவை

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள ஆங்கில மருந்தகத்திற்கு (பாமசிக்கு) மருந்து விற்பனைக்குப் பெண்கள் தேவை. நல்ல அனுபவம் உள்ளவர்களும், பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

07-01-2002இற்கு முன் நேரில் சமுகமளிக்கலாம்.

வசந்தம் பாமசி,
(96465) 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

## விற்பனைக்கு

சன் சைன் வீடியோ

எயர் கொண்டிசன் (AC) (வின்டோ ரைப்), நிக்ஸ் 2000 ரைற்றில் மிக்சர், புதிய Panasonic HD 680 Audio inset டெக் என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு – **சன் சைன் வீடியோ,**
(96474) உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

---

## JAFFNA CENTRAL SPORTS CLUB

(Sports Development of Jaffna Central is prime Objective of the Club)

### யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம்
### அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம் :- இன்று (30-12-2001) ஞாயிற்றுக்கிழமை
நேரம் :- 10.00 மணி
இடம் :- யாழ்.மத்திய கல்லூரி

நிகழ்ச்சி நிரல் -

1. இறைவணக்கம்
2. பெரியோர்கள் உரை
3. யாப்பு அங்கீகரித்தல்
4. உத்தியோகத்தர் தெரிவு
5. கல்லூரிக் கீதம்

மத்திய கல்லூரியின் தற்போதைய மாணவர்களும்,
மத்திய கல்லூரி பழைய மாணவர்களும்
ஒன்றிணைந்த குழு சார்பாக.

(C/20051) *Central flag must never be Lowered*

---

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை குணரத்தினம்

பருத்தித்துறை, 2ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வடலியடைப்பில் வசித்துவரும் தற்போது கனடா ஸ்காபுரோவில் வசித்துவந்தவருமாகிய செல்லத்துரை குணரத்தினம் அவர்கள் 25.12.2001 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் செல்லத்துரை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற மாணிக்கம் குமரேசு - நீலாயதாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் சண்பகலட்சுமியின் அன்புக் கணவரும் நாகரூபன் (ரூபன்), ஜெகரூபன் (ஜெகன்), காந்தரூபன் (காந்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இலங்கையில் வசித்த காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பாலசிங்கம், பாலசுப்பிரமணியம், தையல்நாயகி, புஸ்பவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இலங்கையில் வசிக்கும் கிருஷ்ணவேணி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற கணேசலிங்கம், திலகவதி (மலேசியா), ஜெகநாதன் (அமெரிக்கா), கனடாவில் வசிக்கும் கமலாதேவி, சுதந்திராதேவி, கெங்கேஸ்வரன், போதகலாதேவி, மங்களேஸ்வரன், கோமவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.12.2001) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*அரசடி வீதி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.* (96473)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
*T.P.No. :- 416 - 265 - 6208*

### கந்தையா இராமச்சந்திரன்

சங்கரப்பிள்ளை வீதி, காளிகோயிலடி ஒழுங்கை, மானிப்பாய் தெற்கு (இந்துக் கல்லூரி முன்பாக) மானிப்பாயைச் சேர்ந்த கந்தையா இராமச்சந்திரன் 28.12.2001 வெள்ளிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புவனேஸ்வரி
(மனைவி)

(C/20063)

# யுத்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்படும்

## அமைச்சர் ஜயலத் அறிவிப்பு

கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட்டு அவர்கள் சிறந்தமுறையில் பராமரிக்கப்படுவர்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன.

நேற்றுமுன்தினம் தமது அலுவலகத்தில் தாம்நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெறற கொடிய யுத்தத்தினால் தமிழ் மக்கள் மிகவும் கடுமையாகப் பாதிககப்பட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வனனியில் உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப்பொருள்கள் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அத்தியாவசியப் பொருள்களை வன்னிக்கு அனுப்புவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு - கிழக்கில் வசிக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கும் புதிய அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது.

வன்னிப் பகுதிக்கும் வவுனியாவுக்கும் இடையிலான போக்குவரத்துப் பாதையைத் திருத்தி அமைப்பதற்கும விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (க-4)

# சீரற்ற மின்விநியோகம் குறித்து உடனடித் தீர்வு பெற்றுத் தருக!

## அமைச்சர் மகேஸ்வரனுக்கு வணிகர்கள் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்நகரப் பகுதியில் தொடரும் சீரற்ற மின்விநியோகப் பிரச்சினை குறித்து மின்சாரசபையுடன் தொடர்பு கொண்டு உடனடியாக உரிய தீர்வு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அமைச்சர் தி.மகேஸ்வரனைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்நகரில் கடந்த இரண்டு மாதங்களாக இலங்கை மின்சாரசபையினால் சீரான மின்விநியோகம் வழங்கப்படாமையினால் எமது வர்த்தக சமூகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதானமாக தற்போது நத்தார், புதுவருட பண்டிகைக் காலத்தில் புடைவைக்கடை வர்த்தகர்கள் தமது வர்த்தகத்தில் பெருஞ்சிரமத்தை அனுபவிககிறார்கள்.

மின்பிறப்பாக்கிகள் வைத்திருக்கும் வர்த்தகர்களும் எரிபொருள் தட்டுப்பாட்டினால் அதனை இயக்கி மின் பெறுவதற்கு இயலாமையினால் வருந்துகிறார்கள். இதுவரை இலங்கை மின்சாரசபை இதனைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

மேலும் - யாழ்நகரில் கூடுதலான வர்த்தக நிலையங்களுக்கு மின்மாணி பொருத்தப்படாது அவர்களிடம் குறிப்பிட்ட ஒரு தொகையை மின்கட்டணமாக அறவிட்டுவரும் மின்சாரசபை, தற்போது அவர்களிடம் கூடுதலான தொகையை அறவிடுவதாக எமக்கு வர்த்தகர்கள் அறியத்தந்துள்ளனர்.

எனவே இந்த விவகாரங்கள் குறித்து இலங்கை மின்சாரசபை உடனடி நடவடிக்கை எடுக்க தாங்கள் ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (க-7)

### முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் 'ஈழத்து மண்ணில் தமிழ் ஊடகங்கள்' என்ற தலைப்பில் இலங்கை வானொலி ஊடகவியலாளர் இளையதம்பி தயானந்தா கருத்துரை வழங்குவார். (ஜ-8)

### கரோல் நிகழ்ச்சிகள்

சண்டிலிப்பாய்,டிசெ.30

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பண்டத்தரிப்பு, சில்லாலை ஆகிய பகுதிகளில் கரோல் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மழைக்கு மத்தியிலும் இக்கரோல் நிகழ்வுகள் இப்பகுதியில் நடத்தப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இதேவேளை -

இப்பகுதியிலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் புத்தாண்டு தின ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. (ஜ-135)

### வருடாந்த ஒன்றுகூடல்

சண்டிலிப்பாய்,டிசெ.30

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நடத்தும் வருடாந்த ஒன்றுகூடலும், மதியபோசன விருந்தும் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.கணேஸ்வரராசா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் யாழ்.சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொள்வார்கள். (ஜ-135)

### அல்லாரை பாடசாலை சொந்த இடத்தில்

தென்மராட்சி,டிசெ.30

அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம் ஜனவரியில் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதால் வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் நாளை திங்கட்கிழமை நெல்லியடியில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்திற்கு வருகைதருமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை வித்தியாலயத்தில் மாணவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-117)

### அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி,டிசெ.30

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஜ-117)

# பிரதமர் ரணில் எடுக்கும் முடிவுகளுக்கு சந்திரிகா முட்டுக்கட்டை போடக்கூடாது

## செய்தியாளர்கள் மத்தியில் வைகோ கருத்து

சென்னை,டிசெ.30

இலங்கை இனநெருக்கடிக்குத் தீர்வுகாண புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முடிவுகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முட்டுக்கட்டை போடக்கூடாது.

- இப்படிக் கேட்டுள்ளார் மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ.

நெய்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்சமயம் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானப் பேச்சு தொடங்கப்பட்டுள்ளது.

பொருளாதாரத் தடைகளை அடியோடு அகற்றவேண்டும். அத்துடன் இராணுவ நடவடிக்கைகள் நிரந்தரமாக நிறுத்தப்படவேண்டும்.

பேச்சுமூலம் தீர்வுகாண புதிய அரசு முன்வரவேண்டும். புதிய பிரதமர் எடுக்கும் முடிவுகளுக்கு ஜனாதிபதி முட்டுக்கட்டை போடக்கூடாது - என்றார் அவர். (க-3)

# பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

மட்டக்களப்பில் இருந்து வெளிவரும் 'தினக்கதிர்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அந்தச் சங்கம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'தினக்கதிர்' பத்திரிகை அலுவலகத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்த குழுவால் பத்திரிகையாளர் தர்மரத்தினம் சிவராம் (தராக்கி) மற்றும் 'தினக்கதிர்' ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த விஜேந்திரனும் தாக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தையிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்றுள்ளது.(க-3)

# மூதூர் கிழக்குப் பகுதித் தாய்மார் வீடுகளில் பிரசவிக்கும் அவலம்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்கு பிரதேச மக்கள் சீரான வைத்தியம் மற்றும் சுகாதார சேவைகள் இன்றி துன்பப்படுகின்றனர். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய அலுவலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் கிழக்குப் பகுதியில் வாழும் தாய்மார்களில் 83 சதவீதமானோர் தங்கள் வீடுகளிலேயே, பயிற்சி பெற்ற மருத்துவ மாதுக்களின் உதவியினறி குழந்தைகளைப் பிரசவிக்கிறார்கள். இதன் காரணமாக பிரசவிக்கும் தாய்மாரும் குழந்தைகளும் உயிரிழக்கும் ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தாய்மார்களில் 90 சதவீதத்துக்கு அதிகமானோர் ஆஸ்பத்திரிகளில் குழந்தைகளைப் பிரசவிக்கின்றார்கள். இராணுவக் கட்டுபாடற்ற பகுதிகளில் ஊட்டச்சத்து இன்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனால் பாடசாலைகளில் மாணவர்கள் மயககம் போட்டு விழும்நிலை ஏற்படுகிறது என்று பாடசாலை அதிபர்கள் முறையிட்டுள்ளனர்.

மூதூர் கிழக்குப் பகுதியில் ஆபத்தான நோயாளிகளை திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவருவதில அப்பகுதி மக்கள் பெருங்கஷ்டங்களை அடைகின்றனர். அப்பகுதிகளில் நடமாடும் வைத்தியசேவை நடத்தப்படவேண்டும். அத்துடன் மோட்டார் வள்ள அம்புலன்ஸ் சேவை ஒன்றை நடத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்போது தரை மார்க்கமாக ஒரு நோயாளியைத் திருகோணமலைக்குக் கொண்டுவருவதற்கு மூன்று மணி நேரத்துக்கு அதிகமாகச் செல்கிறது. கடல்வழியாக மோட்டார் அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டால் 45 நிமிடங்களில் நோயாளியை மூதூரிலிருந்து திருகோணமலைக்குக் கொண்டுவரலாம் - இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# பத்திரிகையாளர் மீதான தாக்குதல்; இரு சந்தேக நபர்களுக்குப் பிணை

## ஒருவருக்கு 9ஆம் திகதி வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு 'தினக்கதிர்' பத்திரிகை அலுவலகம் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள 3 சந்தேக நபர்களில் இருவர் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும் முதலாவது சந்தேக நபரான இராமகிருஷ்ணன் சுரேஷ் எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின் போது படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பத்திரிகையாளர் டி.சிவராம் (தராக்கி) மற்றும் தினக்கதிர் பத்திரிகையாளர் எஸ்.விஜேயந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட மட்டக்களப்பு பொலீஸார் இராமகிருஷ்ணன் முரளி, அவரது சகோதரன் இராமகிருஷ்ணன் சுரேஷ், அவரின் நண்பரான மருந்து விற்பனைப் பிரதிநிதி இக்னீசியன் நிசோர் ஆகிய மூவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

சந்தேக நபர்கள் மூவரும் மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் அப்துல் கபூர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

முதலாவது சந்தேக நபரான சுரேஷை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். ஏனைய இருவரும் 25ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர். (க-3)

நெஞ்சை விட்டகலா

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பொன்னையா கமலரூபன்

(விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

கமலத்தின் ரூபனே! என்றும் அழியாக் காவியமே!
ஆண்டொன்று சென்றதோ - எங்கள்
ஆதார தெய்வமே உமைப் பிரிந்து
உற்றார் ஊராரைத் தவிக்கவிட்டு
கற்றோர் மற்றோரை கலங்கவிட்டு
பாரினைவிட்டே பல தூரம் சென்றதேனோ?
நித்தம் உன் நினைவுகளைச் சுமந்தபடி வாழ்கின்றோம்.
விழிகள் தேடும் இடமெல்லாம் உந்தன்
விம்பந்தானே தெரியுதையா!
ஆயிரம் ஆண்டு சென்றிடினும் ஆறாதையா உன் நினைவு.

கரவெட்டி மத்தி. (96449) - குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 12 - 08 - 1945



மறைவு 28 - 11 - 2001

அமரர்

பரமானந்தம் சுப்பிரமணியம்

(மணி அண்ணன் - வாகன உதவியாளர்)

உற்றாரின் உறுதுணையாய் ஊரெல்லாம் போற்றுபவனாய்
பாங்குடனே பலருக்கு உதவி பல புரிந்தவர்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கட்டப்பிராய்,
வட்டக்குளம்,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (96352) குடும்பத்தினர்.


தேசம் சுமக்கும் பாவம் தீர தீர்த்தமாடுவோம்!



தேசம் சுமக்கும் பாவம் தீர்த்தே தீர்வு சேர்க்க
தில்லைபுர ஈசனின் ஆருத்திரா தரிசனம் காண்போம்
வேஷம் கலைந்து விடிவு பூக்கும் காலம் வருகுது
விடத்தைக் கழுத்தில் சுமந்த வேந்தன் தீர்த்தம் காண்போம்.

மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன்

இன்றைய ஈழத்துச் சிதம்பர ஆருத்திரா தரிசன,
தீர்த்தோற்சவம் சிறக்க
வாழ்த்துவோர்:-

யாழ் காலணியகம்
(பாட்டா ஏஜென்சி)
11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ் காலணி நிலையம்
17, 18, 18A, நவீன சந்தை, உட்புறம் - யாழ்.
(C/20042)

# காரைநகர் சிவன் கோயில் மாணிக்கவ



# பவளவிழாச் சிறப்

## ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை 75ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு மனநிறைவு அடைகின்றோம். சைவமும் தமிழும் வளருகின்ற காரைநகர் மண்ணில் கற்றவர்களும் ஆசாரசீலர்களும் தர்மவான்களும் வாழந்து கொண்டிருக்கின்ற பெருமைக்குரிய பிரதேசம் காரைநகர். தர்மம் தலைகாக்கும், கொடுத்தார்க்கு குறைவில்லை எனும் சொற்கள் மனித வாழ்வை மேம்படுத்துகின்றன. இதற்கு ஆதாரமாக உள்ளவைகள் தானங்கள். இதில் சிறந்தது அன்னதானம். இப்பெருமையை நிலைநாட்ட அமைக்கப்பட்ட காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை 75 ஆண்டுகளாக அன்னதானப் பணியை செய்து கொண்டிருக்கின்றமை தர்மத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகின்றன.

'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்' என்பது நம் சமயம் கூறும் தருமநெறி. இறைவனை நாயகனாக தன்னை நாயகியாக உருவகப்படுத்தி வழிபாடு செய்தவர் மாணிக்கவாசகர் சுவாமிகள். சொல், செயல் அனைத்தும் தருமத்தின் வடிவமாகவே கொண்டிருந்தது. அவரது பெயரினால் இயங்கிவந்த இச்சபையும் சொல்லையும் செயலையும் ஒன்றாகக் கொண்டது. இச்சபை தொடர்ந்து பலகாலம் இப்பணியை செய்ய இறைவனை வேண்டுகின்றோம். இச்சபையை வழிப்படுத்தும் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக!

வாழ்க மாண'க்கவாசகர் மடாலய அன்னதான சபை,
வளர்க இதன பணிகள்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

2ஆவது குருமகா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.**

## சிவத்தமிழ்ச் செல்வியின் ஆசி



எழுபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்யும் மேற்படி அன்னதான சபை சைவமக்களின் பாராட்டுக்குரிய நிறுவனம் ஆகும். காரைநகரிலும் மற்றும் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சுந்தரேஸ்வரப் பெருமானை தரிசிக்கச் செல்லும் அடியவர்கள் ஆறுதலடையும் இடம் இதுவாகும். உணவு முதலிய நீராகாரத்தைப் பெற்று ஓய்வு எடுத்து தமது யாத்திரையை நல்லபடி நிறைவேற்றுகின்றார்கள். பலர் சாதாரண தினங்களிலும், உற்சவகாலங்களிலும் திருவெம்பாவை நாள்களிலும், இச்சபையின் பணி மிகவும் பாராட்டுக்குரியது. காரைநகர் வர்த்தகப் பெருமக்கள் சிலர் தம்மை இப்பணிக்கென்று அர்ப்பணித்துள்ளனர். அன்னமிடும் பணியோடு மாத்திரம் நில்லாது அதற்குரிய கணக்கறிக்கையையும் ஆண்டுதோறும் வெளியிடுகிறார்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மாணிக்கவாசகர் சபையோடும் அன்னதானப் பணியோடும் எனக்குத் தொடர்பு உண்டு. காலத்துக்குக் காலம் இச்சபையை அலங்கரித்த அருட்செல்வர்கள் பலரை நான் நன்கு அறிவேன்.

'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் தம்மை அமுது செய்வித்தல்' என்பதைக் கருத்தில் கொண்டு பணியாற்றுபவர்கள் இவர்கள். பசித்தவனுக்கு முதலில் உணவைக் காட்டு, பசியாற்றிய பின்பு இறைவனைக் காட்டு என்று கூறினார் சுவாமி விவேகானந்தர். அந்த வகையில் எமது ஆலயங்கள் எல்லாம் இயங்க வேண்டும். இதற்கொரு முன் மாதிரியாக விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் ஆகும். ஆகவே காரைநகர் மாணிக்கவாசகர் சபையின் அன்னதானப் பணியைப் பாராட்டி இச்சபையினருக்கு பணம் படைத்தவர்கள் எல்லோரும் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுத்து ஆனந்தம் அடைய வேண்டும் என்று மிக விநயமாக வேண்டிக் கொள்கின்றேன். சபையினரின் பணி மேன்மேலும் ஓங்கவேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

**கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**
*தலைவர்*
ஸ்ரீதுர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## அன்னதான சபை

இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப் பெருமை ம
சிவன் கோயிலில் இன்று இரதோற்சவமும் ஆருத்திரா தரிசனமும் மிகச் சிறப்பா
நடைபெறுவது போன்று பூசை முறைகளும், திருவாதிரை உற்சவமும் மிகச் சிற
நடராஜப் பெருமானின் திருநடனக் காட்கியைக் கண்டுகளிக்க முடியாதவர்க
திருவாதிரை நாள்களில் இங்கையின் பலபாகங்களில் இருந்தும் வருகை த
தெய்வீகத் தொண்டினை ஈழத்துச் சிதம்பரத்தில் வடக்கு வீதியில் அமைந்து
கடந்த எழுபத்தைந்து (75) ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செய்து இன்று
1926ஆம் ஆண்டு ஆவணி மாதம் 11ஆம் நாள் தீவுப்பகுதி மணியகாரன்
பேரனாரும் அப்போதைய சிவன் கோயில் ஆதீன கர்த்தாவுமாகிய மாசிலாமண
தான மடம் ஒன்று அமைப்பதற்கு அத்திவாரம் இட்டனர். காரைநகர் தந்த
பணத்திலும் ஊர் மக்கள் மனமுவந்தளித்த நன்கொடைப் பணத்திலும் மடம்
கந்தர்மடத்தைச் சேர்ந்த மகாதேவசுவாமிகளால் மாணிக்கவாசகர் திருவ
செய்யப்பட்டது. அன்று முதல் 1956ஆம் ஆண்டு வரை முப்பது ஆண்டுக
கீழ் அன்னதானம் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. 1957ல் காரைநகர்
த.முருகேசு ஆகியோரின் வேண்டுதலின் பேரில் அன்னதான சபை ஒன்று அ




வேண்டிய உணவுப் பொருள்கள் எடுத்துவரப்பட்டு அன்னதானம் சிறப்பாக
காலப்பகுதியில் வீ.வே.சண்முகம் அவர்களின் மகன் வே.ச.மாணிக்கசிவம்
ஆண்டு மகா கும்பாபிஷேகத்துக்கு பின்னர் இரண்டு ஆண்டுகள் முன்னர்
அன்னதானம் நடைபெற்று வந்தது. தற்போது சபையின் இணைத் தலைவர்
ஆகியோர் இருக்கின்றனர். மேற் குறிப்பிட்டவர்கள் தலைவர்களாக இருந்து
முதுகெலும்பாகத் திகழ்ந்து சபையை திறம்பட வழி நடத்திய பெரியவர்களி
அன்னதான சபை என்றால் அதற்கு வைத்திலிங்கத்தார்தான் என்று ஊர
வேதாடைப்பைச் சேர்ந்தவரும் பிரபல மிரு தங்க வித்துவானும் வாலிலை அ
வைத்திலிங்கம் அவர்களின் பணி அளப்பரியது.
மார்கழி திருவெம்பாவை பத்து நாள்களும் தொடர்ச்சியாக மடத்திலே தங்
ஆண்டுகளுக்கு மேலாக இவர் மாணிக்கவாசகர் மடாலயத்தில் ஆற்றிய ப
ஏற்றுக் கொண்ட எம்பெருமான் திருவெம்பாவை திருவிழா நாளில் தில்லைக்
தன்னடியில் சேர்த்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவரது காலப்பகுதி
பணியை சிறப்பாகச் செய்வதில் அருந்தொண்டாற்றியவர் சைவமணி சித்தாந்த
இவர்களுடன் அமரர்களாகிய சு.இராசசேகரம்(J.P), ஓய்வு பெற்ற கல்வி அ
வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்த பெரியார்களாவர்.
1986ஆம் ஆண்டு சிவன் கோயில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ க.
சபையினரால் எடுக்கப்பட்ட விழாவில் அவருக்கு பொற்கிழியும் வழங்கிக் கெ
இராஜ கோபுர திருப்பணிக்கென சபையினரால் பத்தாயிரம் ரூபா அன்பளிப்பா
சிவன் கோயில் மகாகும்பாபிஷேகத்தின் போது மிகச் சிறப்பான முறையில்
பாராட்டையும் பெற்றது. கடந்த ஆண்டு திருவாதிரை தேர்த்திருவிழா அன்ற
தி.மகேஸ்வரன் அவர்களின் உபயமாக அன்னதானம் இங்கு மிகச் சிறப்பாக
கலாசார அமைச்சர் கௌரவ தி.மகேஸ்வரன் அவர்களால் இவ்வருட தேர்த்திரு
மேற்படி சபை கடந்த 75 ஆண்டுகளாக காரைநகரைச் சேர்ந்த வெளி
பெருமக்களின் உதவியினாலும், பொது மக்களின் நன்கொடைகளினாலும் இ
திண்ணபுரத்தில் எழுந்தருளி இருக்கும் ஐயனார் சிவன் திருவருளால் நடந்து
பங்குனி மஹோற்சவம் 10 தினங்கள், ஆடி மாத தேவி மஹோற்சவம் 10
நடத்தி வருகின்றது. அத்தோடு மகாசிவராத்திரி தினத்தன்று இரவு முழுவதும்
என்பவற்றை வழங்கி வருகின்றது.
வரலாற்றுப் பெருமை மிக்க மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின்
நிறைந்த புரவலர்கள், உடல் வலுமிக்க சுறுசுறுப்பான இளைஞர்களும் முன்வரவே
இங்கு வருகை தருகின்ற அடியவர்கள் அனைவருக்கும் உணவு பரிமாறு
நற்பண்பும், ஒழுக்கமும் நிறைந்த இளைஞர்கள் முன்வந்து சபையின் உறுப்
வருகின்ற அடியவர்கள் அமைதியும் ஒழுக்கமும் பேணி கட்டுப்பாடான முறையி
ஏக வேண்டும். இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து அடியவர்கள் அனை
வழங்கி மடாலயத்தின் பணி சிறந்தோங்க உதவுவதற்கு ஈழத்துச் சிதம்பர செள
பூரணைபுட்கலை சமேத ஆண்டிக்கேணி ஐயனாரினதும் திருவருளை வேண்டு

## குருக்களின் ஆசியுரை



1926ஆம் ஆண்டு பெரியார் கண்டிச் சண்முகமும் ஊர்பெரியவர்களும் சேர்ந்து ஆரம்பித்த மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையானது இன்று 75 அகவையைப் பூர்த்தி செய்து பவளவிழாக் கொண்டாடுகின்றது.

நாட்டின் பல பாகங்களிலும் வாழ்கின்ற வரையாது வழங்கும் வர்த்தகப் பெருமக்களினதும் அன்பர்கள் அடியார்களது பண உதவி, பொருளுதவிகளினாலும் இச்சபை கடந்த 75 ஆண்டுகளாக திருவிழாக்காலங்களில் ஆலயத்திற்கு வரும் அடியார்களுக்கு திருவமுது ஊட்டும் பணியைச் செவ்வனே செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அன்னதானத்திற்கு தம்மையே அர்ப்பணித்துத் தொண்டு செய்து வந்த அடியவர்கள் பலர் நோய்வாய்ப்படாது மரணப்படுக்கையின்றி இறைவனைத் தியானித்தபடியே சிவபதம் அடைந்த வரலாற்றை அனைவரும் அறிவர்.

பல்வேறு சிறந்த தானங்கள் இருப்பினும் ஏழைக்கு உணவளித்து வருந்திவந்தவர் அரும்பசி களைந்திடும் தானம் உலகிலேயே சிறந்த தானமாகும். இந்த அன்னதானப் பணியை தனித்து ஒருவர் செய்ய முடியாது. ஊர் கூடித் தேர் இழுப்பது போல எல்லா மக்களும் வழங்குகின்ற உதவியினாலே எத்தனை ஆயிரம் அடியவர்கள் வந்தாலும் வற்றாத அமுத சுரபியாக நின்று அன்னதானம் வழங்குவதற்கு உதவும் திருவருளை வியந்து நிற்கின்றேன்.

ஊழி உள்ளவரை இச்சபையானது அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குகின்ற பணியை மேற்கொள்ள வாழ்த்தி ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசுவரப் பெருமானை துதித்து நல்லாசி கூறி அமைகிறேன்.

மூதறிஞர்
சிவத்திரு. **க.வைத்தீஸ்வரக் குருக்கள்.**

## தேவஸ்தான ஆதீனகர்த்தாக்களின் வாழ்த்துச் செய்தி



இன்று பவள விழாக் காணும் காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர் ஆண்டுதோறும் சிவன் கோயில் திருவிழாக் காலங்களில் வருகைதரும் அடியார்களுக்கு சிறப்பான முறையில் அன்னதானம் வழங்கி வருகின்றனர். 75 ஆண்டு கால வரலாற்று பெருமைமிக்க இச்சபையின் இணைத் தலைவர்களாக இருந்து பணியாற்ற திருவருள் கைகூடியமையை இட்டு பெருமகிழ்வு அடைகின்றோம்.

எதிர்காலத்திலும் இச்சபை சிறந்த முறையில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குகின்ற பணியை தொடர்ந்து மேற்கொண்டு வருவதற்கு எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

**திரு.ஆ.அம்பலவிமுருகன், திரு.மு.சுந்தரலிங்கம்**
ஆலய ஆதீன கர்த்தாக்களும்,
மடாலய சபை இணைத்தலைவர்களும்.

## அருட்கவி வாழ்த்துகின்றார்



இன்பமுயர் காரைநகர்ப் பதியில் மேவும்
ஈழத்துச் சிதம்பரத்தான் திருத்தாள் போற்றும்
அன்புவளர் திருத்தொண்டர் அன்னம் நல்கும்
அருள் பூத்த மாணிக்க வாசகர்ப் பேர்
பொன்பயிலும் சபையாரின் எழுபத்தைந்து
பொருந்துவய துடையகற் பகமே மேன்மேல்
முன்பொலியும் சிதம்பரத்தான் கால மெல்லாம்
முனைந்தபணி புரிந்தினிது வாழிவாழி!

அமுதன்னம் தந்து தொண்டர்
அனைவர்க்கும் பணிகளாற்றி
நமது சிவ நெறியைக் காக்கும்
ஞானதவச் சபையினரோ
உமையன்னை கலசம் தாங்கி
உங்களை ஊக்குகின்றாள்
இமயம் போல் அன்னச் சேவை
என்றென்றும் வாழிவாழி!

**அருட்கவி சீ.விநாசித்தம்பி** M.A.
தலைவர், இந்து சமயப் பேரவை.
நாகேஸ்வரம், அளவெட்டி.

**தேவி அச்சகம்,**
114/9 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**சீமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-2196

**இளவரசி றெக்ஸ்றைல்**
இல.57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**சிங்கப்பூர் ஜுவல்லறி,**
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-3327

**வெங்கடேஸ்வரா**
125A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
*கிளை நிறுவனம்:* **சிறி மாதவன்**
97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2905

**ஈஸ்வரன் றேடேஸ்**
இல.69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**SRI MURUGAN**
COMMUNICATION & COMPUTER SYSTEMS
T.P.No.: 021-2670,021-3588
Fax: 021-3214
303,K.K.S.Road.Jaffna.

**ரூபா பன்முக வர்த்தகம்**
(Rupa Versatile Trades)
104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# கவாசகர் மடாலய அன்னதான சபை

# ப்புமலர் 30-12-2001



## சபையின் வரலாறு

லாற்றுப் பெருமை மிக்க ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர்
னமும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில்
உற்சவமும் மிகச் சிறப்பாக நடைபெறுவதனால் இந்தியா சென்று சிதம்பரத்து
ரிக்க முடியாதவர்கள் காரைநகரில் உள்ள ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி
இருந்தும் வருகை தருகின்றனர். இவ் அடியார்களுக்கு திருவமுது ஊட்டும்
வீதியில் அமைந்துள்ள மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர்
பாக செய்து இன்று பவளவிழாக் கொண்டாடுகின்றனர்.
பகுதி மணியகாரன் (A.G.A) சோமசுந்தரம் அவர்களும் அம்பலவிமுருகனின்
வுமாகிய மாசிலாமணியும் சேர்ந்து சிவன் கோயில் வடக்கு வீதியில் அன்ன
ர். காரைநகர் தந்த புரவலர் திரு.வி.வே.சண்முகம் அவர்களின் சொந்தப்
பணத்திலும் மடம் சிறந்த முறையில் நிர்மாணிக்கப்பட்டது.
ணிக்கவாசகர் திருவுருவம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு மடத்தில் பிரதிஷ்டை
ர முப்பது ஆண்டுகள் திரு.வீ.வே.சண்முகம் அவர்களின் மேற்பார்வையின்
1957ல் காரைநகர் சிவன் கோயில் ஆதீன கர்த்தாக்கள் அ.ஆண்டிஐயா,
தான சபை ஒன்று அமைக்கப்பட்டு மாணிக்கவாசகர் மடாலய அன்னதான



சபை எனப் பெயரிடப்பட்டது. இம்முயற்சிக்கு முன்நின்று உழைத்தவர் காரைநகர் சம்பந்தர் கண்டியைச் சேர்ந்த அருணாசலம் நாகலிங்கம் அவர்களாவார். அன்றைய காலப்பகுதியில் இச் சபையின் தலைவராக விளங்கியவர் கணக்கனா கண்டியைச் சேர்ந்த S.R.S என அழைக்கப்படும் பிரபல புடைவை வர்த்தகர் சி.இ.செல்லத்துரை அவர்களாவார். ஒரு தசாப்தத்திற்கு மேலாக S.R.S அவர்களின் தலைமையில் அன்னதான முயற்சிகள் நடைபெற்று வந்தன. அவருக்குப் பின்னர் பசறை பிரபல வர்த்தகர் E.V.கார்த்திகேசு அவர்கள் தலைவராக இருந்து செயற்பட்டு வந்தார். அவரைத் தொடர்ந்து வி.மு.சண்முகம் அவர்கள் 1988 வரை 12 ஆண்டுகள் தலைவராக இருந்து இச்சபையைத் திறம்பட நடத்தி வந்தார். இவரது காலப்பகுதியில் இவரது லொறிகள் மூலமாக அன்னதானத்திற்கு
ன்னதானம் சிறப்பாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். 1988–1990
வே.ச.மாணிக்கசிவம் அவர்கள் தலைவராகவும் விளங்கினார். 1998ஆம்
ஆண்டுகள் முன்னாள் கொத்தனி அதிபர் K.K.நடராசா தலைமையில்
இணைத் தலைவர்களாக திரு.ஆ. அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்
லவர்களாக இருந்து அருந்தொண்டாற்றிய அதேவேளையில் இச்சபையின்
த்திய பெரியவர்களில் ஒரு சிலரை ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகும்.
ர்தான் என்று ஊரவர்கள் புகழ்ந்து பேசத்தக்க அளவிற்கு காரைநகர்
வானும் வானிலை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தருமான இராமலிங்கம்

யாக மடத்திலே தங்கி நின்று மடத்தை சிறப்பாக வழிநடத்தி வந்தார். 28
யத்தில் ஆற்றிய பணி அளப்பரியது. இவருடைய தெய்வீகப் பணியை
நாளில் தில்லைக் கூத்தனின் திருநடனத்தை தரிசித்தபடியே இறைவன்
இவரது காலப்பகுதியில் மடாலயத்திற்கு பெருநிதி சேர்த்து அன்னதானப்
சைவமணி சித்தாந்த செம்மல் வித்துவான் மு.சபாரத்தினம் அவர்களாவார்.
வு பெற்ற கல்வி அதிகாரி க.சபாபதி, கு.இராசையா போன்றோரும் சபை

சாரியார் சிவஸ்ரீ, க.மங்களேஸ்வரக் குருக்களின் சேவையைப் பாராட்டி
யும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. 1987ஆம் ஆண்டு ஐயனார் சிவன்
ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது. 1998ஆம் ஆண்டு நடைபெற்ற
றப்பான முறையில் அன்னதானம் செய்யப்பட்டு சபை அனைவரினது
கர்த்திருவிழா அன்று கௌரவ யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
ங்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டும் இந்த
இவ்வருட தேர்த்திருவிழா அன்னதானம் மிகவும் சிறப்பாக செய்யப்பட்டது.
ரைச் சேர்ந்த வெளியூர்களில் வியாபாரத்துறையில் இருக்கும் வர்த்தகப்
ரடைகளினாலும் இளைஞர்களின் சரீர உதவிகளினாலும் சபை திறம்பட
நவருளால் நடந்து வருகின்றது. மார்கழி திருவெம்பாவை 10 தினங்கள்,
மஹோற்சவம் 10 தினங்கள் ஆகியவற்றில் அன்னதானத்தை திறம்பட
இரவு முழுவதும் ஆலயத்திற்கு வரும் அடியவர்களுக்கு கோப்பி, தேநீர்

அன்னதான சபையின் பணிகளை மேலும் மெருகூட்டுவதற்கு பொருள்வளம்
ஞர்களும் முன்வரவேண்டும். விசேட திருவிழாக்காலங்களில் பெருமளவிற்கு
உணவு பரிமாறும் பணியில் ஈடுபட ஆர்வம் உள்ள பொறுமையும்,
சபையின் உறுப்பினர்களாக இணைந்து கொள்ள வேண்டும். இங்கு
டுப்பாடான முறையில் நான்கு மண்டபங்களிலும் அமர்ந்து திருவமுதுண்டு
அடியவர்கள் அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை மடாலயத்தினருக்கு
ழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானினதும்
திருவருளை வேண்டிநிற்கின்றோம்.

**ந.பாரதி.**

## இந்து கலாசார அமைச்சர் விடுத்த வாழ்த்துரை



சிவநேயச் செல்வர்களும் சிவதர்ம வள்ளல்களும் நிறைந்த புண்ணிய பூமியாகிய காரைநகரில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை திருவாதிரை உற்சவ காலத்திலும் மகோற்சவ காலத்திலும் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்கு திருவமுது செய்விக்கின்ற திருத்தொண்டினை கடந்த 75 ஆண்டுகளாக சிரமேற்கொண்டு செய்து வருகின்ற மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையினர் இன்று பவள விழாவினை சிறப்பாக கொண்டாடுகின்றனர்.

இவ்வாலயத்திற்கு வருகின்ற அடியவர்களுக்கு திருமதி தங்கம்மா நடராசா அவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த சிவாச்சிரமமும் அடியவர்களால் பரிபாலிக்கப்படும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையும் திருவமுது செய்விக்கும் பணியை கடந்த காலங்களில் மேற்கொண்டு வந்தன. போர்க்கால சூழ்நிலையில் காரைநகரில் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் சிவாச்சிரமக் கட்டடங்கள் சிதைவடைந்து இயங்காத நிலையில் தனி ஒரு நிறுவனமாக நின்று ஆலயத்திற்கு வரும் அனைத்து அடியார்களுக்கும் திருவமுது செய்விக்கின்ற பணியினை தொடர்ந்து இடைவிடாது மேற்கொண்டு வரும் மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையினர் பாராட்டுக்குரியவர்கள். எதிர்காலத்தில் இச்சபை மேன்மேலும் சிறந்து விளங்கி பல்லாயிரக் கணக்கான அடியார்களுக்கு திருவமுது செய்யும் சிவத்தொண்டினை மேற்கொண்டு வருவதற்கு எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்த ராம்பிகை சமேத சுந்தரேஸவரப் பெருமானின அருள் வேண்டி ஆசி கூறுகின்றேன்.

**தி.மகேஸ்வரன்**
இந்து கலாசார அமைச்சர்.

## சபைப் பொருளாளரின் செய்தி



'தேடிய மாடி வீடு செல்வம் தில்லைச் சிற்றம்பலத்துள் ஆடிய பெருமாள் அன்பர்க்கு ஆவன....' என்ற சேக்கிழார் சுவாமிகளின் திருவாக்குக்கு அமைய எம் முன்னோர் தம் உடல் பொருள் ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து அன்னதானச் சபையை நிறுவினர். 1927ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இச் சபையில் பல தொண்டர்கள் இணைந்து அரும்பணியாற்றினர். ஈழத்துச் சிதம்பர தரிசினத்திற்காக வரும் ஆயிரக் கணக்கான அடியவர்களுக்கு அன்னதானப் பணி செய்வதில் கடந்த 75 வருடங்களாக இச் சபை ஆற்றிய தொண்டினைப் போற்றாதவர்கள் இல்லை. இப்புண்ணிய தர்ம காரியத்தில் எனது தந்தையார் 50 ஆண்டுகளுக்கு மேல் ஈடுபட்டு இருந்ததன் பயனாக நாமும் குறைவின்றி வாழுகின்ற நிறைவைப் பெற்றோம். தந்தையின் வழியில் பணியாற்ற வேண்டும் என ஆலய ஆதீன கர்த்தாக்கள், சபை உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளினால் சென்ற ஆண்டு முதல் பொருளாளர் பதவியை ஏற்று என்னால் இயன்றவரை பணியாற்றி வருகின்றேன். தில்லைக் கூத்தனின் திருவருளினால் கடந்த காலங்களில் நிறைவாக அன்னப் பணி செய்வதற்கு ஒவ்வொரு அன்பர்களும் இன்முகத்துடன் என்னை உபசரித்து அள்ளி அள்ளித் தந்த வண்ணமாக உள்ளனர். குறிப்பாக வர்த்தகப் பெருமக்கள் இப்பணிக்கு தாராள சிந்தையோடு நான் நாடிய போதெல்லாம் உற்சாகமளித்தமை என்றும் மறக்க இயலாது. ஆடி மாத, பங்குனி மாத உற்சவ நாள்களிலும், மார்கழி மாதப புண்ணிய நாள்களிலும் அடையா வாயிலாக அன்னப் பணி செய்வதற்கு அன்பர்கள் ஆதரவுக்கரம் நீட்டிய வண்ணம் உள்ளனர். எனது தந்தை வருடத்தில் ஒரு நாள் செய்த அன்னதான உபயத்தைக் காப்பாற்றி விடு எனத் தந்தை உத்தரவு வீண் போகவில்லை. வருடம் முழுவதும் அடியார் பசியாற்றும் பணியைச் செய்ய அம்பலவாணன் அருள் பாலித்த வண்ணம் உள்ளார். இன்று எனது சபை, பவள விழாப் பொலிவோடு பல்வேறு பணிகளை திட்டமிட்டுச் செயற்படுத்த ஆவலாக உள்ளது. எம்பெருமான் திருவருளால் எமது சபை சூரியன், சந்திரன் உள்ளவரை நிலைத்து நிற்கப் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

**K.K.K.சிவபாலன்**
பொருளாளர்.

(சீ20062)

மலர் அமைப்பு: ந.பாரதி

## அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி



காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை இன்று எழுபத்தைந்தாவது அகவையில் பவள விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் மார்கழி திருவாதிரை உற்சவத்தையும் தில்லைக் கூத்தன் திருநடனத்தையும் கண்டு தரிசிப்பதற்காக நாடெங்கிலும் இருந்து பல்லாயிரக் கணக்கான அடியார்கள் இங்கு ஒன்று கூடுவது வழமை.

நீண்ட தூரங்களில் இருந்து கால் நடையாகவும் வாகனங்களிலும் திண்ணபுரத்திற்கு வருகின்ற அடியவர்கள் தில்லைக் கூத்தனின் திருநடனக் காட்சியைக் கண்டு பேரானந்தத்தில் திளைக்கும் போது வருந்தி வந்தவர் அரும்பசி களைத்து திருந்திய அவர் முகம் கண்டு நிறைந்தவர்கள் காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர். கடந்த 75 ஆண்டுகளாக இவ்வாலயத்திற்கு வருகை தருகின்ற அடியவர்கள் அனைவருக்கும் சிறந்த முறையில் திருவமுது செய்வித்து வருகின்ற பெருமை காரைநகர் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினருக்கே உரியதாகும். பங்குனி மகோற்சவத்திலும் தேவி உற்சவ காலத்திலும் அவர் தம்பணி செவ்வனே செய்து வரும் மடாலயத்தினர் 75 ஆவது ஆண்டு பவளவிழாவை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அவர் தம்பணி தொடர்ந்தும் சிறந்து விளங்க தில்லைக் கூத்தனின் திருவருளை வியந்து வாழ்த்துகின்றேன்.

**க.சண்முகநாதன்,**
அரச அதிபர்,யாழ்.மாவட்டம்.

## செயலாளரின் சிந்தையிலிருந்து....



இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் எம் முன்னோர்களினால் திருவமுது வழங்குவதற்காக சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை இன்று உங்கள் முன்னர் 7 தசாப்தங்களைக் கடந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று பெரும் விருட்சமாக திகழ்கின்றது. இன்று திருவெம்பாவை காலத்தில் மாத்திரமல்ல பங்குனி மாத சிவன் திருவிழா, ஆடிமாத அம்மன் திருவிழா போன்ற திருவிழாக் காலங்களிலும் தினமும் அன்னதானப் பணியை மேற்கொண்டு வருகிறது.

மேலும் இம் மடாலய வளர்ச்சிக்காக காரைநகரைச் சேர்ந்த வர்த்தகப் பெருமக்கள், கொடை வள்ளல்கள் இலங்கையில் எப்பாகத்தில் இருந்தாலும் இம்மடாலய வளர்ச்சிக்காக தேவையான நிதியை அள்ளி வழங்கி வருவது போற்றத்தக்கது, பாராட்டத்தக்கது, வரவேற்கத்தக்கது. மேலும் காரைநகரைச் சேர்ந்த சைவ அபிமானிகளும், சைவநலன் விரும்பிகளும், சிங்கப்பூர், மலேசியா, ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்தும் இம் மடாலய வளர்ச்சிக்காக பெரும் நிதி உதவி அளித்து வருவது பாராட்டப்படக்கூடிய ஒரு சிறப்பம்சமாகும். மேலும் 1991ம் ஆண்டு காரைநகரில் இடம்பெற்ற பாரிய இடப்பெயர்வினாலும் இராணுவ நடவடிக்கையாலும் இம் மடாலயம் பாரிய சேதத்திற்கு உள்ளாகி இருந்தது. இதனை மீள புனரமைப்பதற்காக நிதி உதவி பெற உதவிய வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் திரு.சோமபால குணதீரா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.சண்முகநாதன், மேற்படி ஆலய திருப்பணிச் சபை செயலாளர் திரு.வே.செல்வநாயகம், முன்னாள் சுங்கத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு.K.K.சுப்பிரமணியம் ஆகியோருக்கு எமது மடாலயம் சார்பில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் நான் 1983ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை செயலாளர் மற்றும் ஏனைய பதவிகளிலிருந்தும் கடமையாற்றிய போது உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கு நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் முன்னாள் தலைவர்களான காலஞ்சென்ற திரு.கண்டிசண்முகம், ஆ.கனகசபை (ஜப்பான்), க.வைத்திலிங்கம் (மலாயன் பென்சனர்), திரு.S.R., திரு. செல்லத்துரை, திரு.V.M.சண்முகம் ஆகியோருக்கும் காலஞ்சென்ற திரு.இ.வைத்திலிங்கம் (மிருதங்கம்), திரு.வித்துவான் சபாரட்ணம், திரு.ச.மாணிக்கசிவம், திரு.க.விஜயசிங்கம் (கணக்காளர்), திரு.ஐயாத்துரை மாஸ்ரர், S.R.S தேவதாசன், ச.சபாபதி ஆகியோர்கள் இந்நன்னாளில் நினைவு கூறப்படவேண்டியதுடன் அவர்கள் இம்மடாலயத்திற்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளை காலத்தினாலும் மடாலய வரலாற்றிலும் மறக்க முடியாதவையாகும்.

இம்மடாலய வளர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் எதிர்காலத்தில் தங்களின் அன்பளிப்பை, உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

**வே.சாம்பசிவம்**
செயலாளர், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை,
ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர்ச் சிவன் கோயில்), காரைநகர்.


ப்லறி,
வீதி,
7

அற்புதா ரேடிங் கொம்பனி
198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

காரைநகரின் தனித்துவமான கல்வி நிறுவனம்
ஐடியல் அக்கடமி,
தலைமை நிறுவனம்: சண்டிலிப்பாய்.
கிளை நிறுவனம்: காரைநகர்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்,
இல.50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகம்
வீதி,

தில்லையம்பலம் மகாதேவன்
புதுறோட், காரைநகர்.
(கொழும்பு)

கே.கே.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
318(A), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குகன் ஸ்ரோர்ஸ்,
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில் 30 - 11 - 1975



இறையடியில் 09 - 01 - 2001

## அமரர் சின்னப்பு வீரமோகன் (கண்ணன்)

அண்ணனாய் இனியதம்பியாய்
பாசமிகு பிள்ளையாய்
நல்ல குடும்பத் தலைவனாய்
யாவர்க்கும் அன்பனாய்...
வாழ்ந்த எங்கள் தெய்வமே!
உனை நாம் பிரிந்து
ஆண்டுகள் ஒன்று ஆனாலும் - என்றும்
உந்தன் நினைவுகளுடனேயே
எங்கள் வாழ்க்கை...

- குடும்பத்தினர்.

*பளவத்தை,*
*பொலிகண்டி.*

(96425)

# முதலாம் ஆண்டு இதய அஞ்சலி

பூவுலகில் 12 - 02 - 1934



விண்ணுலகில் 09 - 01 - 2001

## அமரர் சின்னப்பு இரத்தினசபாபதி

**(முன்னாள் களஞ்சிய பொறுப்பாளர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)**

திதி: 30-12-2001

*ஈராறு மாதங்கள் எப்படித்தான் ஓடியதோ?*
*எமது பாசச் சோலை இன்று பாலைவனம் ஆனதோ?*
*பாலை வெளியெல்லாம் உந்தன் பாசமுகம் தேடியே*
*அழுகின்றோம்!*
*ஐயா! உந்தன் அருமைச் செல்வங்கள் வளமுடன் வாழ*
*நீங்கள் இங்கு மெழுகாகினீர்கள்!*
*நீண்டதொரு பயணத்தை நீரிங்கு தொடர்ந்தீர்*
*நெஞ்சுறைக்க நெக்குருகி நிற்கின்றோம்*
*அப்பாவே!.....*

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள.

*போக்காலை வீதி,*
*உடுப்பிட்டி.*

(96383)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு 1942 ★ 05 ★ 04



உதிர்வு 2001 ★ 11 ★ 30

## அமரர் வைரமுத்து செல்வராசா

எமது குடும்பத்தலைவராக விளங்கினீரே!
இன்று எமை விட்டுப் பிரிந்து விட்டீரே!
அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களை மறக்க முடியாது!

ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கிறோம்.

இன்று (30.12.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றிலும் பங்கு கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(96347)

## ஒளிவிழா

ரெலிக்கொம் யாழ்.பிரதேச அலுவலகத்தின் ஒளிவிழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். ப.நோ.கூ.சங்க நடுவப் பணிமனையில் நடைபெறவிருக்கின்றது.

ரெலிகொம் பிராந்திய முகாமையாளர் அன்ரனிராசன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் அருட்திரு. அன்புராசாவின் இறைவழிபாடு, சிறப்புரை, கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறவிருக்கின்றன.

## டீசல் விலை ஒரு ரூபாவால் குறைப்பு!

கொழும்பு,டிசெ.30

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் டீசலின் விலை ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது என அரசு அறிவித்துள்ளது.

இதன்படி இனிமேல் ஒருலீற்றர் லங்கா ஓட்டோ டீசல் 26.50 சதமாகவும், லங்கா சுப்பர் டீசல் 31.80 சதமாகவும் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.(க-7-4-ரி)

## பிரதமரின் செயலகத்தில் சமாதான அலுவலகம்!

கொழும்பு,டிசெ.30

அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்கும், அவற்றைக் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குமாக பிரதமரின் செயலகத்தில் புதிய அலுவலகம் ஒன்று திறக்கப்படவிருக்கின்றது.

அரச உயர் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன. (உ-4)

## குருநகரில் கோஷ்டிமோதல்

குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கோஷ்டி மோதலில் இருவர் காயமடைந்தனர்.

றெக்கிளமேசன் சனசமூக நிலையத்துக்கு அருகில் மோதல் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து மாலை நடந்த சண்டையில் இருவர் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.(க-51)


## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்....
ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo-13.
T.P.No.01 433182, 472582.

(95982)


# முதலாம் ஆண்டு நினைவில்

தோற்றம் 30 - 12 - 1970



மறைவு 30 - 12 - 2000

## அமரர் பொன்னையா கமலரூபன்

*(விரிவுரையாளர், தமிழ்த்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)*

என் அருமை நண்பா!
கண்ணூறோ? வஞ்சனையோ?
காலன் தன் சதி தானோ?
என்ன வென்று நானறியேன்!
சொல்லாமல் நீ விண்ணில்
சோதியில் கலந்து விட்டாய்!
தாளாமல் நான் மண்ணில்
தனித்து இருந்து அலறுகிறேன் ரூபா....

*உனது ஆன்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றேன்.*

உன் பிரிவால் துயருறும் நண்பன்:
இ.கிருஷ்ணகுமார்.

*அரசடி,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

(96361)

## அகவை அறுபதில் சேவை நிறைவெய்தும் யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் ஆசிரியை



## திருவாட்டி தவமணி சிற்சபேசலிங்கம்

General Trd. S.L.T.S. Class I அவர்களின்

சேவைநலன் பாராட்டு

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| 1968.11.01 | யா/பெரியபுலம் மெ.மி.த.க. பாடசாலை | 1972.12.31 |
| 1973-01-01 | யா/ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் | 1974-12-31 |
| 1975-01-01 | வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம் | 1976-02-08 |
| 1976-03-09 | யா/தட்டாதெரு இ.த.க.பாடசாலை | 1981-01-31 |
| 1981-02-01 | யா/வேலணை சரஸ்வதி வித்தியாசாலை | 1983-08-31 |
| 1983-09-01 | யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை | 1996-07-31 |
| 1996-08-01 | யா/தாவடி இ.த.க.பாடசாலை | 1997-03-31 |
| 1997-04-01 | யா/ யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாசடாலை | 2001-12-29 |

எண்ணிய முடித்தல், நல்லவே எண்ணல், திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு என்றும் துலங்கிடத் துலங்கிய **திருவாட்டி தவமணி சிற்சபேசலிங்கம்** ஒரு நிறைகுடம் அனைய ஆசிரியை. பிறப்பிலே குருப்பணிக்கு உருப்பெற்ற உத்தமி. நன்றே செய்தல், அவை இன்றே செய்தல் என்ற உள்ளத் துடிப்போடு பணிக்கு அணி செய்பவர். சேவை மனப்பாங்கு, அச்சேவைக்குகந்த அர்ப்பணிப்பு என்றும் குன்றாத குணக்குன்று.

ஆசிரியர்கள், மாணவர்கள் நெஞ்சகலா நித்திலம் எங்கள் தவமணி அம்மையார். இலங்கை முற்றத்தில் சிந்திய இரத்தினங்களை இலங்க வைக்க வினாடிப் பொழுதும் தூங்காத ஆற்றலின் ஏற்றம்.

மாணவச் செல்வங்களை அவையத்து முந்தியிருப்பச் செய்யும் முயற்சித் திருவினையில் முழுமூச்சாக நிற்பவர். தொட்டனைத் தூறும் மணற்கேணி போல மாணவச் செல்வங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் நல்கிக் கற்றனைத் தூற வைத்த கலங்கரை விளக்கம்.

ஆசிரிய குழாத்தின் ஒற்றுமைப் பாலமாய், உண்மை ஒளிகால என்றும் வெள்ளை உள்ளத்துடன் துடுக்காகச் செயல் புரிபவர். வித்தைக்குரிய ஆலயமாக பாடசாலைக்குப் பரிமாணம் வகுத்த பெருமாட்டி. சேவை நிறைவால் தங்களைப் பிரிவதென்பது நெஞ்சைப் பிழிவது போன்றது. இருப்பினும் சுயநலமற்ற சிந்தையோடு, சிந்தனையைத் திருப்பும்போது அம்மையீர்! நீங்கள் சகல வளங்களும் பெற்று சுகமே வாழ ஆடற் திருமகன், நடுத்தோட்டத்து இராஜவரோதய விநாயகப் பெருமான், நலம் பல நல்க வாழ்த்துகின்றோம். கல்வி உலகு என்றும் மறவா நல் வித்தைக்குரிய நாயகமே! நீடு நலம்பெற வாழ்க!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(96387)

# பாதுகாவலர் சங்கக் குழுவினர் நாளை அரச அதிபருடன் சந்திப்பு

## மத குருமாரும் உடன் செல்வர்

யாழ்ப்பாணம்,டிசெ.30

அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக - காணாமற்போனோர் தொடர்பான விவரங்களை அவரிடம் கையளிப்பதற்காக - பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று நாளை திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு யாழ்.அரச அதிபரைச் சந்திக்கவுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இந்துகுருமார், கிறிஸ்தவ அருட்தந்தையினர் மற்றும் நாகவிகாரை அதிபதி போன்றோரும் இக்குழுவில் இடம்பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காணாமற்போனோர் தொடர்பான விபரங்களை நேரில் சென்று அரச அதிபரிடம் கையளிக்க இருப்பதால் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் சகலரையும் நாளை நண்பகல் 12.30 மணியளவில் சங்கச் செயலாளரை சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஜ-9)

# ஊரெழு பொக்கணைப் பகுதியில் கசிப்பு நிலையம் முற்றுகை!

## உற்பத்திப் பொருள்கள் மீட்பு

கோப்பாய்,டிசெ.30

ஊரெழு பொக்கணைப் பகுதியில் இயங்கிவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய விழிப்புக் குழுவினரால் நேற்றுமுன்தினமிரவு முற்றுகையிடப்பட்டது. இதன்போது அத்தொழிற்சாலையில் இருந்த பெருமளவு கசிப்பு பரல்கள் மற்றும் உற்பத்திக்குப் பயன்படும் பொருள்களான சீனி 3 மூடை, விறகு, கோடா 3 பரல், ஈஸ்ற் என்பனவும் மீட்கப்பட்டன.

இந்த முற்றுகையின்போது கசிப்பு உற்பத்தியாளர்கள் விழிப்புக் குழுவினரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ஜ-72)

# தமிழ்த் திரைப்படத் துறையினை புதிய அரசு ஊக்குவிக்கவேண்டும்

## 'சலன சித்திரம்' அமைப்பு பிரதமருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

தமிழ்ச் சினிமாத் துறையின் வளர்ச்சிக்கு புதிய அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டுமென யாழ். 'சலன சித்திரம்' அமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

இது குறித்து மேற்படி அமைப்பு பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் வருமாறு:-

1983இல் இலங்கையில் இடம்பெற்ற இனவாத வன்செயலின் விளைவாக உள்ளூர்த் தமிழ்ச் சினிமாத் தயாரிப்பு தடுத்து நிறுத்தப்பட்டது. கடந்த 18 ஆண்டுகளாக மாறிமாறிப் பதவியிலிருந்த ஆட்சித் தலைவர்கள் இவ்விடயத்தில் நீதி வழங்கவில்லை.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் கடந்த பல ஆண்டுகளாக சுரண்டல், சீரழிவு மற்றும் பேரினவாதம் என்பவற்றையே தனது கோட்பாடாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இத்தகையதொரு நிலைமையை இனிமேலும் சகித்துக்கொள்ள முடியாது.

ஆட்சித் தலைவராகப் புதிதாகப் பதவியேற்றிருக்கும் தாங்கள் தமிழ்ச் சினிமாவின் வளர்ச்சிக்குத் தங்களாலியன்ற அனைத்தையும் செய்வீகள் என்ற நம்பிக்கையுடன் பின்வரும் ஐந்து கோரிக்கைகளை தங்களிடம் கையளிக்கின்றோம்.

☆ தமிழ்ச் சினிமாப் படத் தயாரிப்புக்கு முழுமையான உதவி மற்றும் ஊக்கம் தரப்பட வேண்டும்.

☆ திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபைக்கு தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.

☆ திரைப்படக் கூட்டுத்தாபனம் மும்மொழிகளிலும் ஒரேவிதமாகக் கருமமாற்றக் கூடியதாக இயக்கப்பட வேண்டும்.

☆ திரைப்படக் கூட்டுத்தாபனம், ஊடகத்துறை அமைச்சின் கீழ்க் கொண்டு வரப்படவேண்டும்.

☆ கலைச் சுதந்திரம் மற்றும் கலைஞர் கௌரவம் என்பன அரசியல் தலையீடோ, குறுக்கீடோ இன்றி மதிக்கப்பட வேண்டும்.

உள்ளூர்த் தமிழ்ச் சினிமா வளர்ச்சிக்காகச் செய்து முடிக்கப்பட வேண்டிய முக்கியமானவற்றுள் மிக அவசியமான சிலவற்றை மட்டுமே மேலே குறிப்பிட்டிருக்கின்றோம். உடனடி நதியைத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

### விரிவாக்க உத்தியோகத்தர் ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.30

ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் இலங்கை தொழில்நுட்ப சேவையில் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கான விரிவாக்க உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

போட்டிப் பரீட்சை மூலம் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நியமனத்துக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் ஜனவரி மாதம் 30ஆம் திகதி ஆகும்.

தொழில்நுட்பத் தகைமைகளுடன் கல்வித்தகைமை உடையவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வெளியான அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளன. வர்த்தமானியின் பிரதியை யாழ்.,கஸ்தூரியார் வீதியில் உள்ள 'அருண்ஸ ஸ்போட்ஸ் ஸ்பொட்டில்' அலுவலக நேரத்தில் பார்வையிடலாம். (ஜ-7)

# பலாலி ஆசிரிய கலாசாலையினருக்கு யாழ்.கல்வி அலுவலகத்தில் சம்பளம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்கு டிசெம்பர் மாதத்துக்கான சம்பளப் பணம் யாழ்.கல்வி வலயப் பணிமனையில் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாள்களும் இந்தச் சம்பளம் வழங்கும் பணி நடைபெற்றது. அந்த நாள்களில் தமது சம்பளத்தைப் பெறத் தவறியவர்கள் நாளை திங்கட்கிழமை அலுவலக நேரத்தில் தமது சம்பளப் பணத்தை முத்திரைச் சந்திப் பகுதியில் உள்ள யாழ்.கல்வி வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி மேற்படி அலுவலகக் கணக்காளர் அறிவித்துள்ளார்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர்; அங்குள்ள விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், ஊழியர்களுக்கு டிசெம்பர் மாத ஊதியத்தை வழங்க எதுவித ஏற்பாடுகளையும் செய்யாமல் கொழும்பு சென்றதால் அவர்கள் சம்பளப் பணத்தைப் பெறமுடியாது தவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-8-10)



கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையில் 10 பாடங்களிலும் அதிவிசேட சித்தி (D) பெற்ற யாழ்.பரியோவான் கல்லூரி மாணவன் சத்தியமூர்த்தி சத்தியரூபனுக்கு மக்கள் வங்கி புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருக்கிறது. அண்மையில் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வின்போது மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன் பரிசுக்குரிய காசோலையை மாணவனுக்கு வழங்குவதை முதற் படத்திலும் - பரிசில் பெற்ற மாணவன் நன்றி தெரிவித்து உரையாற்றுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ)

# ஆடம்பரமான ஆரவாரங்களைத் தவிர்த்து உள்ளத் தூய்மையுடன் வாழப் பழகுவோம்!

போர்காலச் சூழல்கள், அரசியற் குழப்பங்கள், நிம்மதியற்ற மனித வாழ்க்கைகள், மீள முடியாத துன்ப துயர நிகழ்வுகள் மத்தியில் இந்த நூற்றாண்டின் முதலாவது கிறிஸ்மஸ் பண்டிகை எம் மத்தியில் வந்துள்ளது.

அகில உலகமே மகிழ்ச்சியாகக் கொண்டாடும் தினம், இந்த கிறிஸ்மஸ் தினம், வருடா வருடம் கிறிஸ்மஸ் தினமும் வருகின்றது. ஒவ்வொருவரும் தத்தமது இயல்புக்கு ஏற்றவகையில் அமைதியாகவோ, ஆடம்பரமாகவோ கொண்டாடுகிறார்கள். சமய வழிபாடுகளில் கலந்து செபிக்கின்றார்கள். உறவினர், நண்பர், அயலவர் என வாழ்த்துத் தெரிவிக்கின்றார்கள். வாழ்த்து மடல்கள் அனுப்புகின்றார்கள். பரிசில்கள் வழங்குகின்றார்கள். ஏழை, எளியவருக்கு உதவி செய்கின்றார்கள். இவை யாவும் வருடந்தோறும் எம் மத்தியில் நிகழ்கின்றன. எமது செயற்பாடுகளில் இவையும் பின்னிப் பிணைந்துள்ளன.

இருப்பினும், இவை யாவும் எமது உள்ளங்களின் உண்மையான மகிழ்ச்சியின் வெளிப்பாடா? அல்லது வெளிப்பகட்டுக்காகவா? சிந்திப்போம்!.

இன்று எமது தேசத்துக்குத் தேவையான சமாதானம், சகோதரத்துவம், சமத்துவம் போன்றன மலர்ந்ததாகவோ அல்லது அதற்கான சாத்தியக் கூறுகளோ இன்னும்தான் தென்படவில்லை. மாறாக, நாளுக்கு நாள் போர் நடவடிக்கைகள், ஆக்கிரமிப்புகள், அழிவுகள் பெருகிக் கொண்டே போகின்றன.

இதற்கு உதாரணமாக இந்த ஆண்டில் அண்மையில் அகில உலகையும் ஆட்டிப் படைக்கும் சக்தி கொண்ட அமெரிக்க நாட்டிற்கு நடந்தது என்ன? ஒரு சில கணப்பொழுதில் நிகழ்ந்தது என்ன? அதன விளைவாக ஆப்கானிஸ்தான் போன்ற

**ஞாயிறு நற்பிரசாதம்**

முஸ்லிம் நாடுகளில் நடப்பது என்ன? இற்றைக்கு 2001ஆம் ஆண்டுகளுக்கு முன் மனுக்குலத்திற்கு மீட்பைக் கொண்டுவந்த மனுமகன் பிறந்த இடமாகிய பெத்லகேமிலும் அண்டைய நாடுகளிலும் போர்மேகங்கள் சூழ்ந்துள்ளன.

இப்பிரதேசங்கள் யுத்த நடவடிக்கைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து அல்லோல கல்லோலப்படுகின்றனர் ஏன்? தேவாலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவிக் கிறிஸ்தவர்கள் கொன்றழிக்கப்பட்டனர்.

எமது நாட்டில்கூட கடந்த வருடம் மக்களால் தெரியப்பட்ட அரசு ஒரு வருடத்தில் கலைக்கப்பட்டு மீண்டும் ஓர் தேர்தல்.

இப்படியான அரசியல் மாற்றங்கள், குழப்பங்கள், யுத்தங்கள் ஒருபுறமிருக்க மறுபுறத்தில் முழு உலகையும் கலங்கடித்துக் கொண்டிருக்கும் அந்திரெக்ஸ் கிருமிகளும் அதன தாக்கங்களும் இவ்வாறான வன்முறைக் கலாசாரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் இந்த பூமிக்கு எப்போது மீட்சி? அல்லது மீட்சியே இல்லையா?

ஒவ்வொரு ஆண்டும் கிறிஸ்மஸ், புத்தாண்டு திருப்பலிகள் பெரும்பாலும் சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டாக மலரவே பாப்பரசர் முதல் பாமரர் வரையிலான வேண்டுதலாக இருக்கும் ஆனால்.....?

இவையெல்லாவற்றுக்கும் காரணம் யார்? கடவுளையே தொடர்ந்து குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கும் நாம் தான் காரணம் ஆம். நாம் ஒவ்வொருவரும் மனம் மாறவேண்டும். எமது பாவநிலையில் இருந்து மீட்புப் பெற வேண்டும். இன, மத, பேத வேறுபாடின்றி எல்லோரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்பதை நன்குணர்ந்து ஒருவரை ஒருவர் எவ்வித நிபந்தனையுமின்றி அன்பு செய்ய வேண்டும். ஒருவரொருவருடன் பகைமையை நீக்கி பாசத்தை வளர்ப்போம்.

**மேரி மஞ்ரிக்கா ஆனந்தராசா. கரவெட்டி.**

மலர்கின்ற புத்தாண்டு ஐக்கியம், ஒருமைப்பாடு, சாந்தி, சமாதானம் நிறைந்த ஒரு மகிழ்வான ஆண்டாக மலர அனைவரும் ஒன்றுபடுவோம். அளவுக்கதிகமான ஆடம்பரம், ஆரவாரங்களைத் தவிர்த்து உண்மையான தூய்மையான அன்புடன் ஒருவருக்கொருவர் வாழ்த்துத் தெரிவிப்போம். உதவி செய்வோம் கிறிஸ்து 2001ஆம் ஆண்டுகளுக்கு முன் கொண்டு வந்த சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம். இறைவனுக்கு நன்றி கூறுவோம் இறைஆசி பெறுவோம் மலரும் புத்தாண்டை மகிழ்வாய் வரவேற்போம்.

*(நன்றி: பாதுகாவலன்)*

# மழைப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்கக் கோருகிறார் டக்ளஸ்

## பிரதமருக்கு அவர் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

யாழ்.குடாநாட்டில் தொடர்ந்தும் பெய்த அடைமழை காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கே. என்.டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில் - குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தற்போது பெய்து வரும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்; குடியிருப்புக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. கோப்பாய் - கைதடிப் பாலம் போக்குவரத்து செய்யமுடியாமல் சீரழிந்துள்ளது. இவற்றிற்கு உடனடி நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

# யாழ். கல்வி வலயத்தில் சுருக்கெழுத்தாளர் நியமனம்!

யாழ்ப்பாணம்,டிசெ.30

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் உறுப்பினர்கள் 11 பேருக்கு யாழ். கல்வி வலயத்தில் இம்மாத நடுப்பகுதியில் இருந்து நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முற்பகுதியில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண சேவையின் தமிழ் சுருக்கெழுத்தாளர் தரம் III இற்கு ஆள்சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்த ஒக்ரோபர் மாதம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் இருந்தே 11 பேருக்கு இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமனம் பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

ஏ.ரஜினி (பருத்தித்துறை), எஸ். தமயந்தி (பொலிகண்டி), ரி.சுகுணா (இமையாணன்), ஜே.பிரேமினி (அல்வாய்), ரி.ராஜினி (வல்வெட்டித்துறை), பி.ரமேஸ்வரன் (உடுப்பிட்டி), ஐ.கௌரி (கரவெட்டி), ரி.சுதாஜினி (உடுப்பிட்டி), க.வீணா (கரவெட்டி), சி.சியந்தினி (பருத்தித்துறை), ப.சுமதி (கரணவாய்). (ஜ-9)

### ஆசிரியர்களின் உதைபந்தாட்டப் போட்டி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்ட ஆசிரியர்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பலாலி ஆசிரியர் கலாசாலை அணியை எதிர்த்து கரவெட்டிக் கல்விக்கோட்ட அணி மோதவுள்ளது. (ஜ-89)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

பகிறா இன புறொயிலர் குஞ்சுகள உடன் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- வி.குணபாகன், இல. 1014, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம; இல.04, கொழும்புத்துறை வீதி, சுண்டுக் குளி. T.P. No. 3353

(96467)

## வணிகக் கல்வியும் கணக்கீடு

தரம் - 10,11 ஆகிய வகுப்பு களுக்குரிய இந்நூல் பிரபல புத்த கசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். ஆசிரியர்: இ.இரட்ணம் (சிரேஷ்ட விரி வுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம்)

(96466)

## வகுப்புகள்

தமிழ்த் தட்டெழுத்து, சுருக் கெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து வகுப்புகள் 01-01-2002 செவ்வாய்க் கிழமை ஆரமபம். தொடர்பு: இல. 5, அம்மன் வீதி, (வைரவர் கோயில் முன்பாக) கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(96363)

## புறொயிலர் குஞ்சுகள்

பகிரா இன புறொயிலர் குஞ்சு கள் 02.01.2002 மாலை விநியோகிக் கப்படும். விலை 36/=. முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும். (ஓடருக்கு மட்டும்) தொடர்பு:- ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No. 3529,2867.

(96395)

## ஆங்கில வகுப்புகள்

Gr. 10 English Literature புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது. Gr. 9 English Literature ஆரம்பம்: 4-1-2002 G.C.E A/L 2004 Batch General English ஆரம்பம்: 5-1-2002 (அனுமதிக்கு பெற்றோர் வருகை மிக அவசியம்) Literature வகுப்புகளுக்கு மொழித் தகைமை உறுதிப்படுத்தப்படல்வேண் டும். தொடர்பு: K.சுப்பிரமணியம், பழம ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(96365)

## தவறிவிட்டது

அல்லாரை வடக்கு, கொடிகாமத் தைச் சேர்ந்த கிட்டிணன் நல்லம்மா வின் தே.அ.அட்டையும், விசேட அ. அட்டையும் (இல.091016770) அச்சு வேலி பொதுச்சந்தையில் தவறிவிட் டன. கண்டெடுத்தவர்கள் அச்சுவேலி மின்மினி என்ரப்பிறைஸ் அல்லது அச்சுவேலி வடக்கு நியூ ஸ்ரார் கலவி நிலையத்தில் ஒப்படைக்கவும். சன் மானம் வழங்கப்படும்.

(96385)

## இலகு திருமண சேவை

1973, அத்தம், செவ்வாய் 8, பட்ட தாரி, அழகிய மணமகளுக்கு ஏற்ற உள்ளூர் மணமகன் தேவை. சீதனம் உண்டு. உள்ளூர், வெளியூர் மண மக்கள் தேர்வுக்கு தொடர்புகொள்க: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(96400)

## ஆங்கில வகுப்பு பிரிவு III

O/L, A/L, A/Lஇற்குத் தோற்றிய பல்கலை புகுமுக மாணவர்களுக்கான வகுப்புகள் 02-01-2002 காலை 9.30 மணிக்கு ஆரம்பம். நாகேந்திரம் (ஆசிரி யர்), இல.34/4, செட்டித் தெரு, நல்லூர். (I) அடிப்படையில் இருந்து கற்பிக்கபபடும். (II)33 வருட ஆசிரிய அனுபவமுள்ள விசேட பயிற்சிபெற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படும். (96327)

## 2002 தைப் புத்தாண்டு பலாபலன்கள்

தைப் புத்தாண்டுப் பலாபலன் களும், தைமாத ராகு, கேது மாற்றங் களும் எங்கும் விறபனையாகின்றன. எல்லா ராசி பலன்களும் அடங்கியது. கணிப்பாசிரியர் Prof. சத்தியதாசன் (சத்யா - தத்துவஞான ஜோதிடவிஞ் ஞான நூல்களாசிரியர்), 3 ஆம் மைல, ஆனைக்கோட்டை T.P. - 021-2753

(96463)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக் கோழிகள் மொத்தமாக வும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் கொடுக் கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக் கோட்டைச் சந்தி. T.P. 3529, 2867

(96295)

இறைச்சிக்கோழிகள் புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) வேண்டிய நிறை களில் பெற்றுக்கொள்ளலாம். புறொயி லர் 1Kg 160/-. தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (96360)

புறொயிலர் 1Kg 150/-, கல்பேட்ஸ என்பன மொத்தமாகவும், சில்லறை யாகவும் விற்பனைக்கு உண்டு. சுத் தம் செய்தல் இலவசம். தொடர்பு: மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

(96443)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ள லாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்தி ரைச் சந்தையடி, நல்லூர். (96415)

இறைச்சிக்கோழி(Broilers), கல் பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தின மும் சுத்தம் செய்து வேண்டிய நிறை களில் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப பாணம். (96398)

இறைச்சிக்கோழி(Broiler) கல் பேட்ஸ், சேவல் என்பன மொத்தமாக வும் சில்லறையாகவும் தேவையான நிறைகளில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல.68, பழைய பூங்கா வீதி, யாழ்ப் பாணம். (96258)

## விற்பனைக்கு

நீளகோண்கள் 18", 22", 24", மைக் வகைகள் அம்பிளிவயர் மொடல ECA - 150 w (மொனோ) பட்டுக் குடைகள், யூனிற் (40 w 16 ) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம.மயூரன், மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில். (96366)

நான்கு நாள் பேட்டுக் குஞ்சு களும், சேவல் குஞ்சுகளும் விற் பனைக்கு உண்டு. தை மாதம் குஞ்சு கள் தேவைப்படுவோர் உடன் பதிவு செய்யவும். தொடர்பு: 123, அம்பல வாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

(96378)

வீட்டுப் பாவனைக்குரிய எவர் சில்வர், பித்தளை, கண்ணாடிப் பாத் திரங்களும் வேறு பொருள்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கே.வீ.சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

(96377)

இறைச்சிக்கோழி, புறொயிலர் விற்பனைக்கு உண்டு. பாதிக்கோழி உட்பட தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- 105, புகையிரத நிலைய வீதி, யாழ்ப் பாணம். (வீரகேசரி காரியாலயத்திற் கும் ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில்)

(96456)

## புத்தகங்கள்

வானொலியில் 'பொறாமை' நாட கம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி? 2.யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. வீடற்ற வன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 4. இலக்கியக் கட்டுரை கள் 5. யாழ்ப்பாணம் 6. ஒரு காதலின கதை. (96457)

---

விண்ணக வாழ்வில்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 31 - 08 - 1936

விண்ணில் 30 - 11 - 2001

## திருமதி இந்திராவதி தியாகராஜா

நீங்கள் விண்ணகம் சென்று
முப்பத்தொரு நாள்கள் மறைந்தாலும்
எமது உயிர் உள்ளவரை - உங்கள்
நினைவலைகள் எங்கள் மனதைவிட்டு மறையாது.

இன்று (30-12-2001) ஞாயிற்றுக்கிழமை 'உதயபவனம்' இல்லத் தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பொற்பதி லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(96394)

*பிரிவால் துயருறும்:*
எ.சிவகுமார்
*(சிவா).*

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 19 - 11 - 1916

உதிர்வு 30 - 11 - 2001

அமரர்

## சிதம்பரப்பிள்ளை கந்தர் சின்னத்தம்பி

நாளும் பொழுதும் நமக்காக வாழ்ந்தீர்கள்
நன்மைபல நமக்களித்து நல்லோராய் மிளிர்ந்தீர்கள்
எல்லோரும் போற்றிட எமைவாழ வைத்தீர்கள்
எங்களுயிர் அப்பாவே! இனியுமைக் காண்பதெப்போ?

*68, செட்டித்தெரு,*
*நல்லூர்.*

(96399)

*பிரிவால் துயருறும்:*
*மனைவி, பிள்ளைகள்.*

---

## மாநகரசபை - யாழ்ப்பாணம்

**2002ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரம், வாகன, மிருகவரி பெறுவதற்கான அறிவித்தல்**

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலை யங்கள் யாவும் 2002ஆம் ஆண்டுக்கான வியாபார உத்தரவுப் பத்திரங்களை உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும்.

அத்துடன் வாகன, மிருகவரி உரிமத் தகடுகளையும் உரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*28-12-2001*

(C/20052)

இ.இராமலிங்கம்,
*மாநகர ஆணையாளர்,*
*மாநகரசபை, யாழ்ப்பாணம்.*

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சற்குணசிங்கம் *(குணமண்ணை)*

*(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)*

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை ஐயனார் கோயில் வீதியைச் சேர்ந்தவரும், கனடாவில் வசித்து வந்தவருமாகிய தம்பையா சற்குண சிங்கம் அவர்கள் 25.12.2001 செவ்வாய்க்கிழமை கனடாவில் சிவபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) தம்பையா - சிவபாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - கண்மணி தம்பதிகளின் அனபு மருமகனும், புவனேஸ்வரி என அழைக்கப்படும் நல்லம்மா (இளைப் பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், இராஜலட்சுமி (லண்டன்) மற்றும் காலஞ்சென்றவர்களான பூபதி, ஜெகராஜசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சின்னத துரை மற்றும் சரஸ்வதி, செல்வமலர், ரெங்கநாதன் (லண்டன்), ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினவடிவேலுவின் அன்புச் சகலனும், சற்குணதேவி (நிதி), சற்குணபாலன் (சிவா), சற்குணராஜன் (ராஜன்), சற்குணேஸ்வரி (ராஜி), சற்குணேஸ்வரன்(குமரன்), சற்குண ஜோதி(றோகினி), தேவகி மற்றும் காலஞ்சென்ற சற்குணராணி (ராணி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவானந்தன், அனுராதா, மீனலோஜினி (லண்டன்), பாலச்சந்திரன், விக்னேஸ்வரதேவி, விஜயகுலன், ஆனந்த ராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சுதா, நிஷாந்த், மதுரி, விஷ்ணுகோபன், விதுர்ஜன் (லண்டன்), நிதுர்ஜன் (லண்டன), அகல்யா, மயூரன், வெங்கடேஷ், அஜன், வேணுஜய, லக்ஷமி ஆகியோரின பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கனடா Scarborough Highland Memorial மண்ட பத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (31.12.2001) திங்கட் கிழமை காலை 11 மணியளவில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11, ஐயனார் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*
**T.P (416) 265 - 3541** (கனடா)
**APT 1605 - 215 MARKHAM ROAD,**
**SCARBOROUGH ONTARIO,**
**NIJ 3C4, CANADA.**

*தகவல்:*
த.இரத்தினவடிவேல் *(சகலன்)*
*(முகவர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்).*

(96451)

## திருமதி சக்திவேலு ரெத்தினாம்பாள்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமா கவும் கொண்டு தற்போது புதுக்குடியிருப்பில் வசித்தவராகிய திருமதி சக்திவேலு ரெத்தினாம்பாள் 26.12.2001 புதன்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார்.

அன்னார் நாதஸ்வர வித்துவான் சக்திவேலுவின் அன்பு மனைவியும் ஹேமாவதி, நீலவண்ணன், மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும் அற்புதராஜா, தனபாக்கியலெட்சுமி, இராசரெத்தினம் ஆகியோரின் அன்புச சகோதரியும் ஜெயானந்தன்(தவில்) அவர்களின் அன்பு மாமியாரும் தர்மிலா, அஜந்தன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2001 வியாழக்கிழமை புதுக்குடி யிருப்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக கொள்ளவும்.

*ஸ்ரேசன் றோட்,*
*கோண்டாவில்.*

(96454)

தகவல்:
தவில் மு.ஜெயானந்தன்
(மருமகன்).

## திருமதி அன்னம்மா செல்வரட்ணம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்டு தற்போது புத்தளத்தில் வசித்தவராகிய திருமதி அன்னம்மா செல்வரட்ணம் அவர்கள் 26.12.2001 புதன்கிழமை புத்தளத்தில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் கலா நிதி, ரகுநாதன், மதிராணி, பரஞ்சோதி, குலமணி, மனோரஞ்சிதம், காலஞ் சென்ற ரஞ்சிதராணி, தயாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணலிங்கம், புனிதவேல், புவிராஜ், மகேஸ்வரன், சுரேஷ்குமார் ஆகியோரின் மாமியாரும சின்னத்துரை, காலஞ்சென்ற இராசதுரை மற்றும் குமாரவேலு, செல்வரட் ணம், சுப்பிரமணியம், பேபி, மகேஸ்வரி, சரஸ்வதி, தவமணி, குணமணி, நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் நிலக்ஷா, விஷ்ணு, ஷர்மிளா, கருஷோத, ஜெய்சன், ஜொனி, ஜெசிகா, அனுஷா, டினேஷ், சுரிதாசினி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2001) ஞாயிற்றுக்கிழமை புத்தளத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*G.P.S.வீதி,*
*கல்வியங்காடு.*

(96397)

*தகவல்:*
புனிதவேல்
*(மருமகன்).*

## திருமதி செல்லம்மா கந்தையா

அளவெட்டி வடக்கு, தேரிட்டியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா கந்தையா நேற்று (29.12.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும், கதிரமலை (சீமெந்துக் கூட்டுத்தாபனம் - யாழ்ப்பாணம்) கணேசலிங்கம், ஞானேஸ்வரி, ஸ்ரீகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மீனாட்சி, காலஞ்சென்ற முருகையா ஆகியோரின் அன்புச்சகோதரியும், செலஸ்ரீனா, அழகுராணி, ப.உதயகு மார் (தபால் நிலையம் - அளவெட்டி), நடேஸ்வரி ஆகியோரின் மாமி யாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*

(96464)

தகவல்:
ப.உதயகுமார்
(மருமகன்)

# உலகப் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் உரிமைப் போராட்டங்கள் நசுக்கப்பட்ட ஆண்டு

## ஜனவரி

★ 'யூரோ' நாணயத்தை ஏற்றுக் கொண்ட நாடுகளின் பட்டியலில் கிரேக்கம் இணைந்தது.

★ சீனாவுக்கும் தைவானுக்கும் இடையே 50 ஆண்டுகளின் பின்னர் கப்பல் போக்குவரத்து ஆரம்பம்.

★ இந்தியாவின் உத்தரப் பிரதேசம் திரிவேணி சங்கமத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கும் மகா கும்பமேளா ஆரம்பம்.

★ வத்திக்கானில் புனித இராயப்பர் தேவாலய புனிதவாசல் ஜூபிலி ஆண்டு கொண்டாட்டத்தின் முடிவில் மூடப்பட்டது. இது மீண்டும் 2025இல் திறக்கப்படும்.

★ காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா கொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பினார்.

★ மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோரில் நில நடுக்கத்தால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழப்பு.

★ இந்தியாவில் தஞ்சமடைந்த திபெத்திய ஆன்மீகக் குரு 17ஆவது கர்மபாலாமாவுக்கு இந்தியா அகதி அந்தஸ்து வழங்கியது.

★ இஸ்ரேலின் புதிய பிரதமராக ஏரியல் ஷெரோன் பதவியேற்றார்.

★ உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

★ ஒரு மாதகால இடைவெளியில் எல்சல்வடோரில் மறுபடியும் பூகம்பம்; உயிரிழப்பு நூற்றுக்கணக்கில்.

★ 'லூனர் ஷு மேக்கர்' என்ற விண்கலம் 'ஈரோஸ்' என்ற விண்கல்லில் தரையிறங்கியது. இந்த வகைச் சம்பவம் நிகழ்வது இதுவே முதல்முறை.

★ இரு ஆண்டுகளின் பின்னர் முதன்முறையாக ஈராக் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல்.

# 2001இல் உலக அரங்கில்.......

★ மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ குடியரசின் அதிபர் லோறன்ஸ் கபிலா மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ இரண்டாம் உலகப்போரின் பின்னர் முதற்றடவையாக அமெரிக்காவில் - கலிபோர்னியா மாநிலத்தில் - மாநிலம் ஸ்தம்பிக்குமளவுக்கு மின்தடை ஏற்பட்டது.

★ அமெரிக்க அதிபர் பதவியிலிருந்து பில்கிளின்ரன் விலக, ஜோர்ஜ் டபிள்யூ புஷ் பதவியேற்றார்.

★ பிலிப்பைன்ஸில் ஊழல் குற்றச்சாட்டுக் காரணமாக ஜோசப் எஸ்ரடா அதிபர் பதவியிலிருந்து விலகினார்.

★ பிரிட்டனின் வெய்ஸெஸ்டன் நகரில் குடியேறவும், காணி, கட்டடம் வாங்கவும் யூதர்களுக்கு 1231 ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட தடை 800 ஆண்டுகளின் பின்னர் நீக்கப்பட்டது.

★ குருதிப் புற்றுநோயைக் குணப்படுத்த மனிதனின் நரம்பிடைத் தொகுதியில் நிணநீர்க்குழியங்களை உற்பத்தி செய்துவிடும் சிகிச்சை முறை பிரிட்டனில் கண்டுபிடிப்பு.

★ இந்தியாவின் குஜராத் மாநிலத்தைத் தாக்கிய பூமியதிர்ச்சிக்கு ஆயிரக்கணக்கானோர் பலி!

★ அவுஸ்திரேலிய "இன்பத் தமிழ்" வானொலி சேவையில் தொடர்ந்து 50 மணித்தியாலங்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி, பிரபாகரன், சுரேஷ் ஜோகிம் ஆகிய இலங்கையர்கள் உலக சாதனை.

## பெப்ரவரி

★ 1988ஆம் ஆண்டில் 270 பேரைப் பலிகொண்ட 'லொக்கர்பீ' விமானக் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு லிபியர்களுக்கு ஆயுள் தண்டனை விதிப்பு.

★ இந்தியாவில் 45 நாள்கள் நடைபெற்ற மகாகும்பமேளா முடிவடைந்தது.

★ விடுதலைப் புலிகளைப் புகழ்வதாகக் கூறி 'காற்றுக்கென்ன வேலி' தமிழ்த் திரைப்படம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டது.

★ இந்தோனேசியாவின் தீவு மாநிலமான கரிமந்தானில் பெரும் இனக்கலவரத்தில் 270 பேர் இறந்தனர்.

★ கிரிக்கெட் ஜாம்பவான் சேர் டொனால்ட் பிரட்மென் காலமானார்.

★ மேற்கு வங்கச் சட்டப் பேரவையில் 55 ஆண்டுகளாக உறுப்பினராகவும் அதில் 24 ஆண்டுகள் முதல்வராகவும் இருந்த கம்யூனிஸ்ட் தலைவர் ஜோதிபாசு தீவிர அரசியலிலிருந்து விலகினார்.

★ கால்நடைகளைத் தாக்கும் ஒருவகை நோயால் ஐரோப்பா கலங்கியது.

## மார்ச்

★ ஆப்கானிஸ்தானில் புராதன 'பாமியான்' புத்தர் சிலைகள் தலிபான்களால் அழிப்பு.

★ தமிழகத்தில் தினமணிப் பத்திரிகை ஆசிரியரான முதுபெரும் பத்திரிகையாளர் ஏ.என்.சிவராமன் காலமானார்.

★ இந்தியாவில் 'தெகல்கா' இணையத்தளம் அம்பலப்படுத்திய ஆயுதபேர ஊழலால் பரபரப்பு.

★ டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 500 விக்கெட்டுகளை வீழ்த்திய முதலாவது பந்துவீச்சாளர் என்ற பெருமையை மேற்கிந்திய வீரர் கொட்னி வால்ஸ் பெற்றார்.

★ 15ஆண்டுகளாக விண்ணில் மிதந்த 'மீர்' விண்வெளி நிலையம் பசுபிக் கடலில் வீழ்த்தப்பட்டது.

★ 73ஆவது ஒஸ்கார் விருதுகளில் 5 பரிசுகளை 'கிளாடியேட்டர்' திரைப்படம் வென்றது. சிறந்த நடிகை யூலியா ரொபேர்ட். சிறந்த நடிகர் ருசல்குரோ.

★ பாலியல்வல்லுறவுக் குற்றச்சாட்டில் தமிழ் நடிகர் மன்சூர் அலிகானுக்கு 7 அண்டுகள் சிறை.

## ஏப்ரல்

★ ஆஸ்திரேலியத் தமிழர் சுரேஷ் ஜோகிம் நிலத்தில் பந்தை தட்டியபடி 155.9கி.மீ. நடந்து சாதனை படைத்தார்.

★ சீனக்கடலின் வான்பரப்பில் அமெரிக்க உளவு விமானத்துடன் மோதி சீனப் போர் விமானம் நொறுங்கியது.

★ உலகில் கருணைக் கொலையை முதற்றடவையா நெதர்லாந்து அங்கீகரித்தது.


★ முதல் செயற்கை இதயம் அமெரிக்காவில் கண்டுபிடிப்பு.

★ உலகில் மிகப்பெரியதாகக் கருதப்படும் 845கரட் முத்து மியான்மரில் கண்டெடுக்கப்பட்டது.

★ ஜப்பானின் புதிய பிரதமராக ஜூனிசிரோ கெய்சுமி பதவியேற்றார்.

## மே

★ உலகின் முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணி என்ற பெருமையை சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்று திரும்பிய 60 வயதான அமெரிக்கக் கோடீஸ்வரர் டெனிஸ் மட்டோ பெற்றார்.




★ ஐ.நா.மனித உரிமை ஆணையத்தில் உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்யும் தேர்தலில் அமெரிக்கா முதன்முறையாகத் தோற்றது.

★ உலகில் மிக நீளமான குழாய்ப்பாதை இந்தியாவின் குஜராத் மாநிலத்திலிருந்து 1,670 கிலோ மீற்றர்கள் தூரத்தில் உத்தரப்பிரதேசம்வரை அமைக்கப்பட்டது.

★ சிரியாவுக்கு விஜயம் மேற்கொண்ட பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பள்ளிவாசலுக்குச் சென்றார். பாப்பரசர் ஒருவர் பள்ளிவாசலுக்கு சென்றது அதுவே முதல தடவையாகும்.

★ ஐ.நா.சர்வதேசப் போதைப் பொருள் கட்டுப்பாட்டு அமைப்பின் உறுப்புரிமையை அமெரிக்கா இழந்தது.

★ பிரிட்டனின் ஜனநாயக வரலாற்றில் முதற்றடவையாகப் பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது.

★ 'மிஸ் யூனிவேர்ஸ்' அழகிப் பட்டத்தை மத்திய அமெரிக்க நாடான போட்டோரிக்கோவின் 20 வயது டெனிஸ் குயினிஸ் ஆகஸ்ட் பெற்றார்.

★ தமிழக சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கு பெரும் வெற்றி.

★ பிரபல இந்திய எழுத்தாளர் ஆர்.கே.நாராயணன் காலமானார்.

## ஜூன்

★ உலகின் ஒரே இந்து நாடான நேபாளத்தில் மன்னர் பிரேந்திரா, ராணி ஐஸ்வர்யா, இளவரசி சுருதி, இளவரசர் நிரஜன் ஆகியோர் உட்பட 11 பேரைப் பட்டத்து இளவரசர் திபேந்திரா சுட்டுக்கொன்றுவிட்டு தற்கொலை செய்துகொண்டார்.

★ உலகில் அதிக உயரத்தில் அமைக்கப்பட்ட வானியல் ஆய்வு மையம் இந்தியாவின் காஷ்மீரில் 'ஹேராஸ்வர் ஹனி' சிகரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

★ பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் ரொனி பிளேயரின் தொழிற்கட்சி பெரு வெற்றி.

★ ஈரானிய அதிபர் தேர்தலில் மொஹமட் கடாமி வெற்றி.

★ 1995ஆம் ஆண்டு அமெரிக்காவில் 168 பேரைப் பலிகொண்ட 'ஒக்லஹோமா' குண்டு வெடிப்பு சூத்திரதாரி மக்வேக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

★ பலஸ்தீனத் தீவிரவாதிகளைக் கைதுசெய்யும் இஸ்ரேலின் கோரிக்கையை முதற்றடவையாக பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் ஏற்றுக்கொண்டார்.

★ இத்தாலிக் கடலில் இலங்கை அகதிகளுடன் மூழ்கிய கப்பல் 5 ஆண்டுகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

★ பைசா நகர சாய்ந்த கோபுரம் மேலும் சரிந்து வீழ்வதைத் தடுக்கும் பணிகள் பூர்த்தி.

★ இந்தியாவின் மணிப்பூர் சட்டசபை பொதுமக்களால் தீக்கிரை.

★ இராணுவ ஆட்சியாளரான ஜெனரல் பர்வேஷ் முஷாரப் பாகிஸ்தானின் அதிபரானார்.

★ யுத்தக் குற்றங்கள் குறித்த விசாரணைகளுக்காக யூகோஸ்லாவியாவின் முன்னாள் அதிபர் சொலபொடான் மிலோசெவிக் சர்வதேச நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

## ஜூலை

★ சென்னையில் தனது வீட்டில் இருந்து பொலீஸாரால் இழுத்துச் செல்லப்பட்டார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

★ ஐ.நா. செயலாளர் நாயகமாக கானா நாட்டைச் சேர்ந்த கோபி அனான் மீண்டும் தெரிவானார்.

★ சைபீரியக் காட்டுப்பகுதியில் ரஷ்ய விமானம் விழுந்து நொறுங்கியதில் 143 பேர் இறந்தனர்.

★ உலகில் முதல் முதலாக ஒருவருக்கு சுயமாக இயங்கக்கூடிய செயற்கை இதயம் அமெரிக்க மருத்துவர்களால் பொருத்தப்பட்டது.

★ சூரியனை ஓர் ஒழுங்கில் சுற்றிவரும் பனிக்கோள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

★ சாம்பியாவில் நடந்த மாநாட்டில் ஆபிரிக்க ஒன்றியம் உருவானது.

★ பாகிஸ்தான் அதிபர் முஷாரப் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். பிரதமர் வாஜ்பாயுடன் அவர் நடத்திய "ஆக்ரா" பேச்சு தோல்வியில் முடிந்தது.

★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சென்னையில் காலமானார்.

★ அதிகாரத்தை மீறிச் செயற்பட்டதற்காக இந்தோனேசிய அதிபர் அப்துல் ரஹ்மான் வாஹிட் பதவி விலக்கப்பட்டார்.

## ஓகஸ்ட்

★ முன்னாள் கொள்ளைக்காரியும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான பூலான்தேவி சுட்டுக்கொல்லப்பட்டார்.

★ பிரிட்டனில் 3,500 பாடசாலைகளைச் சேர்ந்த சிறுவர்கள் ஒரே சமயத்தில் துள்ளிக் குதித்து உலக சாதனை.

★ மஸிடோனியாவில் அல்பேனியத் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் களையச் சம்மதம்.

★ இந்தியாவில் விளையும் புகழ்பெற்ற பாஸ்மதி அரிசி வகைககு அமெரிக்க நிறுவனம் ஒன்று சர்வதேசக் காப்புரிமை பெற்றது.

★ தமிழகத்தில் மூத்த அரசியல்வாதியும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவருமான கருப்பையா மூப்பனார் காலமானார்.

## செப்ரெம்பர்

★ இனவெறிக்கு எதிரான ஐ.நாவின் முதலாவது மாநாடு தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் ஆரம்பம். மாநாட்டை இஸ்ரேலும், அமெரிக்காவும் புறக்கணித்தன.

★ கிழக்குத் திமோரில் முதலாவது சுதந்திரத் தேர்தலில் புரட்சிகர முன்னணி வெற்றி.

★ அமெரிக்காவின் உலக வர்த்தக நிலையக் கட்டடங்கள் மற்றும் பென்டகன் அலுவலகம் மீது விமானங்களை மோதி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

★ அரசியல் கொலைகளில் சி.ஐ.ஏக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை அமெரிக்க அரசு விலக்கிக் கொண்டது.

★ முதல்வராக ஜெயலலிதா நியமிக்கப்பட்டது செல்லாது என்ற நீதிமன்றத் தீர்ப்பையடுத்து அவர் பதவிவிலகினார்.

★ அமெரிக்காவிலிருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளுக்கமைய, பிரான்ஸில் இருந்த நோயாளிக்கு இயந்திரமனிதன் மூலம் சத்திர சிகிச்சை. உலகின் முதலாவது தொலைதூர சத்திரசிகிச்சை இது.

★ ஐ.நா.பாதுகாப்புச் சபையில் பயங்கரவாதத் தடை தீர்மானமானது.

★ கடந்த ஆண்டு மேற்குக்கரை, காஸாப் பகுதிகளில் மூண்ட வன்முறைகள் ஒரு வருடத்தை பூர்த்திசெய்து தொடர்கின்றன.

## ஒக்ரோபர்

★ ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கையரான சுரேஷ் ஜோகிம் தலையில் பால்போத்தலை நிறுத்தியபடி தொடர்ந்து 133 கிலோ மீற்றர்கள் நடந்து உலக சாதனை படைத்தார்.

★ பங்களாதேஷ் பொதுத் தேர்தலில் வென்று பேகம்கலிதா பிரதமரானார்.

★ பயங்கரவாதத்துக்கு எதிரான போரை ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா ஆரம்பித்தது.

★ கடிதங்கள் மூலம் பரப்பப்பட்ட அந்திரெக்ஸ் கிருமி அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளில் அச்சத்தை ஏற்படுத்தியது.

★ நைஜீரியாவில் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதக் கலவரத்தில் நூற்றுக்கணக்கில் உயிர்ப்பலி.

★ பௌதிக விதிகளை மீளப்பரிசீலனை செய்யவைத்த உலகின் முதலாவது உலோகமற்ற காந்தம் கண்டுபிடிப்பு.

## நவம்பர்

★ அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் ஐ.நா.பொதுச்சபை கூடியது.

★ அமெரிக்க வான் தாக்குதலின் துணையோடு வடக்குக் கூட்டணிப் படைகள் ஆப்கான் தலைநகர் காபூலைப் பிடித்தன.

★ நைஜீரியாவின் அக்பானி டரேகோ உலக அழகிப்பட்டம் வென்ற முதல் ஆபிரிக்கக் கறுப்பின அழகி என்ற பெருமை பெற்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு
'மதுமிதா'

---

அமெரிக்கா மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலை அடுத்து, பயங்கரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா ஆரம்பித்தது. எதிர்வரும் காலத்தில் பெரும் சர்ச்சைகளைத் தோற்றுவிக்கப்போகும் இந்த நடவடிக்கை தொடங்கிய ஆண்டு என்ற பெருமை 2001இற்குத்தான்.

இதேவேளை, பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் இனங்களின் சுயநிர்ணயப் போராட்டங்கள் நசுக்கியொடுக்கப்படும் அவலங்களும் அரங்கேறத் தொடங்கியதும் இந்த ஆண்டில்தான்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்க அதிபராகப் பதவியேற்ற புஷ், மத்திய கிழக்கு குறித்த அலட்சியப் போக்கு, ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதில் பிடிவாதம், சர்வதேச ஒப்பந்தங்களை நிராகரித்தல் என்று அடுக்கடுக்காகத் தவறுசெய்து அமெரிக்காவைத் தனிமைப்படுத்திக்கொண்டார்.

இதன் பிரதிபலனாக, ஐ.நா. அமைப்புகள் சிலவற்றின் உறுப்புரிமைக்கான தேர்தல்களில் அமெரிக்கா தோற்றது.

மிக மோசமான தேர்தல் குளறுபடிகள் மூலம் பதவிக்கு வந்த அதிபர் புஷ்ஷின் செயற்பாடுகளும் தொடக்கத்தில் தடுமாறின.

ஆனால் செப்ரெம்பர் 11 தாக்குதல்களை அவர் கையாண்டவிதம் சர்வதேச சமூகம் கண்மூடித்தனமாக அமெரிக்காவை பின்பற்றவைத்தது. சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலைத் தயாரிப்பதில் உலக நாடுகள் தீவிரமாக ஈடுபட்டு வருவதே இதற்குச் சாட்சி.

அமெரிக்க நகரங்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலை, உலகின் மையத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலாகச் சித்திரிப்பதில் புஷ் வெற்றி கண்டது அமெரிக்காவுக்குச் சாதகமாகிவிட்டது.

ஆனால் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் மக்களுக்கு - அவர்களது மனித உரிமைகளுக்கு - சாவுமணி ஒலிக்கத் தொடங்கியிருப்பது 2001இற்கு அவப்பெயரைத் தந்திருப்பது மறுப்பதற்கில்லை.

---

## மேற்காசியாவில் தொடரும் மோதல்

**மேற்காசியாவில் அமைதி முயற்சிகளை மண்கவ்வ வைத்த ஆண்டு இது. கடந்த ஆண்டு செப்ரெம்பரில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் - தற்போதைய இஸ்ரேலியப் பிரதமர் - ஏரியல் ஷெரோன் ஜெருசலேமுக்கு விஜயம் செய்ததையடுத்து இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே வெடித்த வன்முறை மோதல்கள் இந்த ஆண்டும் தொடர்ந்தன. துரதிஷ்டவசமாக அடுத்த ஆண்டும் தொடரப்போகின்றன.**

**கிளின்ரனின் பதவிக்காலத்தில் நடந்த 'காம்டேவிட்' பேச்சு புஷ் பதியேற்ற பின்னர் சி.ஐ.ஏ.தலைவரின் சமாதானத் திட்டம், மோதல் தவிர்ப்பு ஒப்பந்தங்கள் என எல்லா முயற்சிகளும் விழலுக்கு இறைத்த நீராகின. இதனால் சுமார் ஆயிரத்து ஐந்நூறு உயிர்களைக் காவுகொண்டு தொடர்கிறது அங்கு வன்முறை.**

**பயங்கரவாதத்துக்கு எதிரான தனது போரில் அரபு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக அமெரிக்கா பலஸ்தீனருக்கு சாதகமான போக்கைக் கடைப்பிடித்த அல்லது 'நடித்த' விசித்திரத்தையும் 2001இல் உலகம் பார்த்தது.**

## அழைப்புக் கட்டளை

**இல. 16 பிரிவு 55(1)**

மல்லாகம்/யாழ்ப்பாணம்/மாவட்ட நீதிமன்றத்தில்
நவரத்தினம் நவகுமாரன்,
68/2, இராசாவின்தோட்டம் வீதி,
யாழ்ப்பாணம்.

வழக்கு இல. நானாவிதம்/55
வழக்காளி/கள்
எதிர்

1. **நாகலிங்கம் சோமசுந்தரம்** (பதில் தலைவர்), யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம், 37, சிவகுருநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
2. **சொக்கலிங்கம் விமலதாசன்** (செயலாளர்), 29, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
3. **ஜெயரட்ணம் வீரசிங்கம்** (பொருளாளர்) "கிறவுண் வில்லா", மானிப்பாய்.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/கள்

எதிராளி/களுக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி எதிராளிகளாகிய உங்களுக்கு எதிராக நீங்கள் ஒருதலைப்பட்சமாக கடந்த 12-11-2001இல் வழக்காளியை யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் இருந்து இடைநிறுத்தியதாகவும், மற்றும் எடுத்த முடிவுகளும், சட்டவலுவற்றதென்றும், செல்லுபடியற்றதென்றும், பிரகடனப்படுத்தும்படியும் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் கழகத்தில் நீங்களும், உங்களைசசார்ந்தவர்களும், செயற்குழுக் கூட்டத்தையோ, அல்லது வருடாந்தப் பொதுக் கூட்டத்தினையோ, விசேட பொதுக்கூட்டத்தையோ கூட்டக்கூடாது என்றும இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார் ஆதலினால், இதனோடு இணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2002ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15ஆம் நாள் அன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படும் நீவீர் அறிந்துகொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறிமோகன் (பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.)

என்னால் வரையப்பட்டது
மு.சபாநாதன், ஜே.பி.யூ.எம்.
(வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி)

குறிப்பு: விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதிபற்றிய அறிவித்தலை நீவீர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்

து.சிறிமோகன்.
கையொப்பம் பதிவாளர்

(96455)

2001 ஆண்டு மார்கழி மாதம் 27 ஆந் நாளாகிய இன்று

## உலகப் பயங்கர...

(11ஆம் பக்கத் தொடர்சி)

★ கொசோவாவில் ஐ.நா.கண்காணிப்பின்கீழ் முதல் தேர்தல் நடந்தது.

★ 40 ஆண்டுகளில் முதற்றடவையாக கியூபாவுடன் அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் செய்தது.

★ ஆப்கானின் எதிர்காலம் பற்றி ஆராய ஜேர்மனியின் 'பொன்' நகரில் மாநாடு.

★ பாப்பரசர் முதற்றடவையாக ஈமெயில் மூலம் சம்பிரதாய மன்னிப்புக் கோரினார்.

★ நேபாளத்தில் மாவோயிஸ தீவிரவாதிகள் கிளர்ச்சி; முதற்றடவையாக இராணுவம் களமிறங்கியது.

★ அமெரிக்காவில் குளோனிங் மூலம் முதல் மனித முளையம் தயாரிப்பு; விண்மீனைச் சுற்றும் புதிய கிரகமும் கண்டுபிடிப்பு.

### டிசெம்பர்

★ யசீர் அரபாத்தின் அலுவலகம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அவர் உயிர்தப்பினார்.

★ ஊழல் வழக்குகளில் இருந்து ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார். தேர்தலில் நிற்க அவருககிருந்த தடைகளும் அகன்றன.

★ ஆப்கானிஸ்தானில் ஹமீட் கர்சே தலைமையிலான இடைக்கால அரசு பதவியேற்றது. 5 வருட தலிபான் ஆட்சி முடிவுற்றது.

★ இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலை அடுத்து இந்தியா - பாகிஸதான் இடையே உறவில் முறுகல் நிலை.

★ 'பலஸ்ரிக்' ஏவுகணைத் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்தது.

★ பத்தாண்டுகளில் முதற்றடவையாக அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளின் கொடிகள் ஆப்கானில் தூதரகங்களில் ஏற்றப்பட்டன.

★ ஆர்ஜென்ரீனாவில் மக்கள் கிளர்ச்சி காரணமாக அதிபர் பெர்னாண்டோ டி லாரூவா பதவிவிலகினார்.

★ நத்தார் விழாவில் பங்கேற்க பெத்தலகேம் சென்ற யசீர் அரபாத் இஸ்ரேலியப் படைகளால் தடுக்கப்பட்டார். ★

## திருவாசகம் முற்றோதல்

இடம்: நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபம்
நாள்: 01-01-2002 செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 8.00 மணி

அன்பர்கள், ஆதரவாளர்கள், ஆர்வலர்கள், அடியார்கள் அனைவரையும் பங்குபற்றிச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(96460) - சைவ பரிபாலன சபை.

*யாழ். பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினால்*
***28.12.2001 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட***
***அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்***

*முதலாம் பரிசு இல. 1484, இரண்டாம் பரிசு இல. 3089, மூன்றாம் பரிசு இல.1347.*

***5 ஆறுதல் பரிசு இலக்கங்கள் - 3323, 709, 285, 80, 1668.***

*மேற்படி பரிசுக்குரியவர்கள் அதிர்ஷ்டலாபச் சீட்டுடன் 02-01-2002 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பிரதேச செயலகத்தில் தொடர்புகொள்ளவும்.*

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.
*(96396)*

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஏழைகளுக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு
கடன்கொடுக்கிறான் (நீதிமொழிகள்: 19-17)

கோண்டாவில் நல்லசமாரியன் சிறுவர் நிலைய பாலர் பாடசாலை ஆலயப் புனரமைப்புக்காக 3 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து, அதில் ஒன்றரை லட்சம் ரூபாவை தந்துதவியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு
மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார
இந்து கலாசார முன்னாள் அமைச்சரும்
E.P.D.P. செயலாளர் நாயகமுமாகிய
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும் -

நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
**திரு.க.மணிபல்லவராஜன்**
J.P.U.M. (நிஷாந்தன்)
அவர்களுக்கும் -



எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்ச்சியுடன்
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் கிழக்கு
நல்லசமாரியன் சபையினர்.
(96452)

# நெஞ்சம் கனக்க நினைவுகள் துடிக்கும்
# முதலாம் ஆண்டு நினைவு புஸ்பாஞ்சலிகள்


*கமலரூபன் ... கனிவான ஓர் உறவு*
*இன்று காவியமாகி விட்டது முகத்திலே*
*குழந்தையின் மலர்வு; நடையிலே மிகுந்த*
*பணிவு; வார்த்தையாடலிலே நளினம்; கண்ணில்*
*தவழும் ஞானத்தின் ஒளி; கனத்த சிந்தனைகள்*
*இது தான் கமல ரூபம்.*

*என் வாழ்வுப் பூஞ்சோலையில் நன்மலராய்*
*நான் வளர்த்த பிள்ளையாய் வாழ்ந்து*
*கானல் நீராய் கண் சிமிட்டி மறைந்த*
*கமலரூபத்தின்*
*முதலாம் ஆண்டு நினைவு நாள் இன்று!*
*ஆரம்பம் முதலே* **Maths Center** *வளர்ச்சியில்*
*அடிக் கல்லாய் மிளிர்ந்து*
*விடி வெள்ளியாய் ஒளிர்ந்து*
*என் துன்பத்தில் தோள் கொடுத்த*
*மறைந்த கமலரூபத்தின் நினைவு நாள் இன்று!*
*கற்ற வேளையில் நன் மாணவனாய்*
*கற்பித்த வேளையில் நல் ஆசிரியராய்*
*உற்ற வேளையில் நல் அமைச்சனுமாய்*
*மிளிர்ந்தவனே! கமலரூபனே!*
*நீ மறையவில்லை?*
*எம் செஞ்சமெனும் மஞ்சத்தில்*
*உறைந்திருக்கின்றாய்!*

என்றும் உன் நினைவுகளைச் சுமந்திருக்கும்
**விமலன்** (நிர்வாகி)
(MATHS CENTER)

நான் வளர்த்த பிள்ளை
**பொன்னையா கமலரூபன்**

மலர்வு
30 - 12 - 1970



உதிர்வு
31 - 12 - 2000

தமிழோடு உறவாடி
தமிழுக்காய் கரைந்த
கமலரூபம்

ஓ...கமலரூபனே!
காற்றோடு நீ கலந்து
அகவை யொன்று ஆனதையா!
எம் மகிழ்ச்சி எல்லாம் போனதையா
நீ நடந்த...
நீ சிரித்த...
நீ கதைத்த...
MATHS CENTER வளாகம்
தினமுனைத் தேடுதையா!
உன்னிழலை நாடுதையா!

சிறுமணியும் ஒலியெழுப்புமா?
எள்ளி நகையாடி இறுமாந்தோர்
உன்னொலியின் வீச்சுக் கண்டு
கூனிக் குறுகி நின்றனர்!
மனதுள் மறுகுகின்றனர்!

மாணிக்க மாமலையே!
வைத்திய சாலையில்
நீ இருந்த போதும்...
அதன் பின்னும்...
உன்பின்னால் திரண்ட
மாணவ வெள்ளமே
நீ யுகபுருஷன்
என்பதைக் காட்டுகிறது!
உன் புன்சிரிப்பு
காலமெல்லாம் வாட்டுகிறது!

தமிழின் சகாப்தமே!
கண்விழித்துப் பார்!
உன் வழியில்...
பட்டச் சுருள்களுடன்...
உன்னால் உருவானவர்கள்!
உன் தமிழால் கருவானார்கள்!
"தமிழின் பீனிக்ஸே!"
அதோ!
உன்னிலிருந்து எழுந்த
பீனிக்ஸ் குஞ்சுகள்.

**MATHS CENTER,**
சமூகம்.

நெல்லியடி. (96458)

## சுடர் ஒளி டிசெ.30 - ஜன.5, 2002 இதழில்

- தமிழ் ஆயுதக் குழுக்களும் புதிய பாதுகாப்பு அமைச்சரும்
- இனவாதிகளை ஓரங்கட்டும் ரணிலின் அரசியல் நகர்வுகள்
- ஆப்கான் யுத்த மேகங்கள் உபகண்டம் நோக்கி நகர்வு
- யாழ்.கொலைகளின் சூத்திரதாரிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவரா?
- அமெரிக்காவை ஆட்டி வைத்த புயல் அடங்கிவிட்டதா?
- யாழ்.பல்கலைக்கழக வண்டவாளத்தை தண்டவாளம் ஏற்றிய நோட்டீஸ்
- இடைத் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிடத் தடை வரலாம்
- வடக்கிலிருந்து தெற்கு வரை (நகைச் சுவை விருந்து)

மற்றும் பல சுவையான அம்சங்கள்


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுன்னாகம் நகர மத்தி
ஐக்கிய அபிவிருத்தி சனசமூக நிலைய
நிர்வாக உறுப்பினரும்
நவாலி சென்.பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை
அதிபருமாகிய

### திரு.சிறில் சுதந்தரன்

அவர்கள் இலங்கை அதிபர் சேவையில் தரம் 2-Iக்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நிர்வாகத்தினர்
சுன்னாகம் நகர மத்தி,
ஐக்கிய அபிவிருத்தி சனசமூக நிலையம்.

(C/20061)

நீங்கா நினைவதிலே

## ஆறாண்டு நிறைவு

அன்னை மடியில்: 13 - 03 - 1956



அம்பாள் அடியில்: 05 - 01 - 1996

அமரர்

### முத்துக்கிருஷ்ணர் சிவகுமாரன் (குமார்)

பாரெல்லாம் புகழ பல்லாண்டு வாழ்வாயென்று எண்ணினோம்
பாதியிலே பரமனடி சேர்ந்தாயே!
அறிவுக்கடலே குமாரா
ஆண்டாறு சென்றாலும் ஆறாது
தவிக்கின்றோம் உன்பிரிவால்.

உன் நினைவில் வாழும்:
தாய், பிள்ளைகள், சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
மருமக்கள், பெறாமக்கள்.

*காளிகோயிலடி,*
*மல்லாகம்.*

(C/20059)


புத்தாண்டின் புதுப்புலர்வில் . . . . .
நிதுஷா வீடியோ நிறுவனத்தினதும்
வர்த்தகப் பெருமக்களினதும் ஆதரவுடன்
யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையினர்
வடமராட்சியில்
பிரமாண்டமாக வழங்கும்

## மதுர கானங்கள்

*(பிரமாண்டமான இன்னிசை விருந்து)*

காணத்தவறாதீர்!
*(வடமராட்சி உள்ளங்களின் வேண்டுகோளுக்கிணங்க இரு காட்சிகளாக்கப்பட்டுள்ளன)*

இடம் :- ராஜலக்ஷ்மி திரையரங்கு, நெல்லியடி
காலம் :- 01.01.2002, காலை-10.30,. மாலை-2.30

(96479)

நீங்கள் தற்போது விடுமுறையைக்
களி(ழி)த்துக் கொண்டிருக்கும்
18 வயதுக்கு உட்பட்ட சிறுவரா?!
அல்லது
அவ்வாறான ஒருவருடன் தொடர்புடையவரா?
எனின் நாளை இதே இடத்தில்
சந்திப்போம்!!




(C/20064)


## காரைநகரில் ஆயுதங்கள் மீட்பு

காரைநகர்,டிசெ.30

காரைநகரில் உள்ள வீடு ஒன்றில் இருந்து ஆயுதங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை காரைநகர் செம்பாட்டுப் பகுதியில் உள்ள ஆள்களற்ற வீடு ஒன்றை துப்பரவு செய்தபோது வீட்டின் கூரைகளுள் இரண்டு துப்பாக்கிகள் காணப்பட்டதாகவும் -

அவை பின்னர் கடற்படையினரால் மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை பொலீஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

(ம-73)

## விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

ஆனைக்கோட்டைச் சந்தியில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற பஸ் - சைக்கிள் விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

மீசாலை கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடிப் பகுதியில் வசித்துவந்த இரத்தினம் சிவச்சந்திரன் (வயது 17) என்ற இளைஞரே காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த இளைஞர் நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில பணிபுரிகின்றார். இவரது சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

(ம-6-9)

## கொழுப்பற்ற அங்கர் பால்மாவுக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி,டிசெ.30

யாழ.மாவட்ட வர்த்தக நிலையங்களில் கொழுப்பு அற்ற அங்கர் (NON FAT) பால்மாவுக்கும் ஆறு மாதத்திற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பயன்படுத்தும் லக்டோஜன் இல.1 பாலமாவுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் இந்தப் பால்மா வாங்குவதற்காக வடமராட்சிப் பகுதிக்கு வந்து ஏமாற்றத்துடன சென்றதாகவும் வர்த்தக வட்டாரங்களில் பேசப்பட்டது.

(ம-117)

## மிருசுவில் அ.த.க. பாடசாலை மாணவருக்கு!

தென்மராட்சி,டிசெ.30

மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஜனவரியில் மீண்டும சொந்த இடத்தில் இயங்கவுள்ளதால் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி வீதியில் உள்ள எக்ஸலன்ற் கல்வி நிலையத்திற்கு வருகை தருமாறு அதிபர் வா.சடாட்சரம் அறிவித்துள்ளார்.

(ம-117)

## திருநெல்வேலியில் 20 அடி உயர மணிக்கூட்டு கோபுரம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

திருநெல்வேலிச் சந்தியில் 3 லட்ச ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள மணிக்கூட்டுக்கோபுரத்துக்கான அடிகல் நாட்டும் விழா நேற்றுக்காலை நடைபெற்றது. நல்லூர் பிரதேச சபையின் தலைவர் க.மணிபல்லவராஜன் அடிக்கல்லை நாட்டினார். 20 அடி உயரமான இந்த மணிக்கூட்டுக் கோபுரம் கலாசார முறையில் வடிவமைத்துக் கட்டப்படவுள்ளது.

(ஓ-180)

## தவணை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

பலாலி ஆசிரிய கலாசாலையின் அடுத்த ஆண்டு முதலாம் தவணை எதிர்வரும் 2 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும் என கலாசாலை அதிபர் நேற்றுமாலை அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

லீவு காலத்தில் தமது டிசெம்பா மாத வேதனத்தைப் பெறத் தவறியவா்கள் ஜனவரி முதல்வாரத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தில் கல்வி பயின்று 2001 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது நிறுவனத்திற்குப் புகழ் சேர்த்த மாணவ, மாணவிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சென்.ஜோண் பொஸ்கோ | | | யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை | | |
| 1 உ.நிவேதிகா | ~ | 168 | 25 பா.பானுஜன் | ~ | 168 |
| 2 ஆ.ஜதிகானந் | ~ | 162 | 26 ந.திருத்தணிகன் | ~ | 166 |
| 3 வி.கரிகரன் | ~ | 159 | 27 மு.நவநீதசர்மா | ~ | 164 |
| 4 அ.சாயினி | ~ | 156 | 28 சி.சாரங்கி | ~ | 162 |
| 5 மெ.ராம்ஜி | ~ | 141 | 29 ம.அழகரசன் | ~ | 161 |
| 6 யோ.மதுரா | ~ | 136 | 30 மு.பானுகோபன் | ~ | 159 |
| 7 ற.வைஷ்ணவி | ~ | 135 | 31 ர.ஜசாந் | ~ | 145 |
| 8 தி.கலாஜினி | ~ | 127 | 32 ஜெ.ரூபினி | ~ | 143 |
| 9 த.நந்தகோபி | ~ | 124 | 33 ஜெ.சாரங்கா | ~ | 142 |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | | | 34 வீ.ஆரூரன் | ~ | 137 |
| 10 சி.கீர்த்திகா | ~ | 145 | 35 ச.பிரியங்கன் | ~ | 135 |
| 11 த.கிருஷாந்தி | ~ | 138 | 36 நி.செந்தூரன் | ~ | 134 |
| 12 மோ.வைஷ்ணவி | ~ | 137 | 37 மு.மதிவதனி | ~ | 130 |
| 13 ச.சாருஜா | ~ | 131 | 38 கி.சிவரேகா | ~ | 128 |
| 14 பு.லக்ஸிகா | ~ | 124 | 39 கு.குணதீபன் | ~ | 120 |
| 15 யோ.அலர்ஷா | ~ | 124 | பரியோவான் கல்லூரி | | |
| ஆனை. மெ.மி. வித்தியாலயம் | | | 40 ஈ.கஜேந்திரா | ~ | 154 |
| 16 சி.சிவஜனனி | ~ | 143 | 41 த.ஐங்கரன் | ~ | 143 |
| 17 க.சரண்ஜா | ~ | 142 | 42 அ.விசாகன் | ~ | 141 |
| 18 இ.துஷாணி | ~ | 140 | 43 இ.கஜீபன் | ~ | 138 |
| 19 வ.ஷரிஜா | ~ | 136 | இணுவில் மத்திய கல்லூரி | | |
| 20 தீ.சுகன்ஜா | ~ | 131 | 44 கு.தர்சிகா | ~ | 142 |
| 21 யா.விதூசினி | ~ | 128 | யாழ். இ.ம.ஆ. பாடசாலை | | |
| சாவ. இந்து ஆ. பாடசாலை | | | 45 த.நிலஜா | ~ | 138 |
| 22 ந.வேணுசரன் | ~ | 154 | கிளி/தர். அ.த.க. பாடசாலை | | |
| சாவ. டிறிபேர்க் கல்லூரி | | | 46 த.தர்சிகன் | ~ | 134 |
| 23 இ.நிஷாதனா | ~ | 135 | தாவடி த.க. பாடசாலை | | |
| கொக். இந்து ஆ. பாடசாலை | | | 47 பா.கௌசிகா | ~ | 119 |
| 24 த.கிருபன் | ~ | 133 | சென்.பற்றிக்ஸ் | | |
| | | | 48 ம.பொனால்சஜீந்திரன் | ~ | 119 |

## தரம் 1 முதல் O/L வரை.

### பிரிவு II ஆரம்பம் - 01.01.2002

☆ புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை ஒவ்வொரு ஞாயிறும் இடம்பெறும்.
☆ மாதாந்த, தவணைப் பரீட்சை என்பன நடைபெறும்.

## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி.
யாழ்ப்பாணம்.

(96478)


## மரண அறிவித்தல்கள்

### அம்பலவாணர் வீரவாகு

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் வீரவாகு மானிப்பாய், கனகசபை வீதியில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூபதி அம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, கணபதிப்பிள்ளை, வேலுப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும் புஸ்பராணி, தவராசசிங்கம், துரைராசசிங்கம் (டுபாய்), ரஜனி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செ.சந்திரசேகரம் (பிரதம எழுதுநர், சோலைவரிப் பகுதி - மாநகர சபை, யாழ்ப்பாணம்), ஞானாம்பிகை (ஆசிரியை, யாழ். வசாவிளான் ம.ம.வித்தியாலயம்), சுமதி (டுபாய்), ம.தயாளன் (V.S.M. ஸ்ரோர்ஸ், மானிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாளினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.12.2001) ஞாயிற்றுக்கிழமை கனகசபை வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கனகசபை வீதி,*
*மானிப்பாய்.*

தகவல்:
மருதலிங்கம் தயாளன்
(மருமகன் -
V.S.M.ஸ்ரோர்ஸ்,மானிப்பாய்)

(96480)

### சிவலிங்கம் சிவனேசன்

(பனை அபிவிருத்திச் சபை)

அல்வாய் மேற்கு, பூமாஞ்சாலையைச் சேர்ந்த சிவலிங்கம் சிவனேசன் (பனை அபிவிருத்திச் சபை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கம் - பருபதம் ஆகியோரின் மூத்த புதல்வனும் சந்திராதேவியின் (ராணி) அன்புக் கணவரும் சாந்தநேசன், மேசுதன், நேத்திரா, நேசலா ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலாதேவி (ஆசிரியை, திருகோணமலை), மாலினிதேவி, சிவதாசன் (லண்டன்), சாந்தா (திருகோணமலை), காலஞ்சென்ற சிவராஜன், வனிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அருணகிரிராஜா, அரியராஜா, அன்னராஜா (லண்டன்), கமலாசனாதேவி, பாரதாதேவி, ராதாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-12-2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வதிரி, ஆலங்கட்டை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*சந்தனாஸ்,*
*புத்தியாவத்தை,*
*வதிரிமேற்கு,*
*வதிரி.*

தகவல்:
சி.சந்திராதேவி
(மனைவி)

(C/20070)

# கப்பம் கேட்டு கிராம அலுவலரை தாக்கிக் காயப்படுத்திய கோஷ்டி!

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.30

இயக்கம் ஒன்றின் பெயரைக் குறிப்பிட்டு கப்பமாக ஒன்றரை லட்சம் ரூபாவைத் தரும்படி கிராம சேவையாளர் ஒருவரை வற்புறுத்திய இளைஞர் குழு ஒன்று, அதைத்தரு வதற்கு கிராம சேவையாளர் மறுக்கவே அவரை 'எஸ்லோன்' பைப்பால் கடுமையாகத் தாக்கி படுகாயப்படுத்தியது.

வட்டுக்கோட்டை, கல்லூரி வீதியில் வசிக்கும் கிராம சேவையாளர் ஒருவரே இவ்வாறு கொடூரத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றார். அவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் அவரது வீட்டுக்குச் சென்ற குழு அங்கு வைத்து அவரிடம் பணம் கேட்டு மிரட்டியது. அவர் தர மறுக்கவே அவரை ஆலயம் ஒன்றுக்கு அழைத்துச்சென்று அங்கு வைத்து கடுமையாகத் தாக்கி விட்டுச் சென்றது.

மீண்டும் அன்றிரவு அந்த வீட்டுக்குச் சென்ற அக்குழு பணம் தராவிட்டால் சுட்டுவிடுவேன் என்று மிரட்டி விட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### இந்த வருடத்துள் விநியோகிக்கவென

# சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதியாக ரூ. 7லட்சம்

## உள்ளூராட்சி ஆணையாளரால் ஒதுக்கீடு

வலி.தென்மேற்கு,டிசெ.30

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை நிதி வழங்கவென 7 லட்சத்து 94 ஆயிரத்து 500 ரூபாவினை உள்ளூராட்சி ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் பிரதேசசபை, நகரசபை ஆகியவற்றின் கீழ் இயங்கும 'அ', 'ஆ' தரத்தைச் சேர்ந்த 650 சனசமூக நிலையங்களுக்கு இவ்வருட இறுதிக்குள் இந்தப்பணம் நிதியாக வழங்கப்படவேண்டும் எனக் கேட்டுள்ளார். 'அ' தர சனசமூக நிலையங்களுக்கு ரூபா 1250 உம், 'ஆ' தர சனசமூக நிலையங்களுக்கு ரூபா 1000 உம் வழங்கப்படவுள்ளது.

மேலும் மகப்பேற்று நிலையங்களுக்கான ரூபா 4 லட்சத்து 10 ஆயிரமும் -

பொது நூலகங்களுக்கான ரூபா 3 லட்சத்து 30 ஆயிரமும் -

மலசலகூட பராமரிப்புக்காக 1 லட்சத்து 54 ஆயிரம் ரூபாவும் -

மேற்படி 16 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் பிரித்து வழங்கப்படும்.

### மாணவனை மோதிவிட்டு தப்பிய ஆட்டோ

கந்தரமடம், பழம் வீதி பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக வீதியோரம் நின்ற இளைஞர் ஒருவரை அந்த வீதியால் வந்த ஆட்டோ ஒன்று மோதிவிட்டு தலைமறைவாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற்றுவரும் ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் செபஸ்ரியன்பிள்ளை அகிலரமனன் (பழம் றோட், கந்தர்மடம்) என்ற இளைஞரே காயமடைந்தவராவார்.

நேற்றுமாலை வீதியோரம் வேறொரு நபருடன் கதைத்துக் கொண்டிருந்த சமயம் வேகமாக வந்த ஆட்டோ மோதியதாக அந்த மாணவன் தெரிவித்தார்.

இதேவேளை -

இவரை மோதிவிட்டு நிற்காமல் வேகமாகச் சென்ற ஆட்டோவை மோட்டார் சைக்கிளில் துரத்திச்சென்று வழிமறித்த வேறொரு இளைஞரை-

அந்த ஆட்டோ சாரதியும் வீதியால் வந்த மற்றுமொரு ஆட்டோ சாரதியும் சேர்ந்து கடுமையாகத் தாக்கி விட்டுத் தப்பிச்சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டது.

காயமடைந்த மாணவன் நாளை நடைபெறவுள்ள பரீட்சைக்குத் தோற்ற வேண்டியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-6-9-15)


பாரதி அக்கடமி

சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.

2002 A/L இந்துநாகரிகம்

Paper Class

S.முகுந்தன்

(96470) ஆரம்பம் 02.01.2002



இன்று ஆரம்பம்

Diploma in Video Mixing



COREL DRAW & JAVA

மாலை 3.30

மேலதிக விபரங்களிற்கு

Director

STP 54A, Palaly Road, Kandarmadam, Jaffna

T.P. 2674 e-mail: stpedu@sltnet.lk



SUBRA (14)

சித்தன்கேணி

புத்தாண்டில் எம்முடன் இணையும் புதிய மாணவர்களுக்கு!

✳ விசேட கட்டணக் குறைப்பு ✳

புத்தாண்டு தினத்தில் மட்டுமே இது வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

SUBRA (14)

(C/19969) சித்தன்கேணி


## தங்களது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தபோதிலும் இதுவரை 215 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்து தொடர்பான விவரங்களை உத்தியோகபூர்வமாக வெளியிடாமல் உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-6)

## நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர் புதுவருடம் பிறந்ததும் நோர்வேக்குச் செல்லவிருக்கின்றார்.

ஆனால் அந்த விசேட தூதுவர் யார் என்பது குறித்து இன்னும் உறுதியான தகவல்கள் வெளியாக வில்லை.

அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே அந்தத் தூதுவர் என சில செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் சீனாவுக்கான தற்போதைய இலங்கைத் தூதுவர் பேர்னாட் குணதிலகவே இந்தப் பணியை ஆற்றுவார் என வேறு சில செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமாதானப் பேச்சுத் தொடர்பான ஆரம்ப ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பு அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ் மற்றும் மிலிந்த மொரகொட ஆகியோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் அவர்களுள் ஒருவர் பிரதமர் ரணிலின் விசேட தூதுவராக நோர்வே செல்லக்கூடும் என வேறு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரி.மாறப்பன ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதையடுத்து இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து நடைமுறைப் படுத்த அனுமதி வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு படை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான தேர்தல் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள உள்ளூராட்சித் தேர்தல் சட்டங்களின் படி கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வேட்பாளர் பட்டியல் ஒன்றைச் சமர்ப்பித்து அதனடிப்படையில் போட்டியிடுவதும் -

வெற்றியீட்டும் கட்சியின் அல்லது குழுவின் முதன்மை வேட்பாளர் மேயராக அல்லது தலைவராக அறிவிக்கப்படுவதும் -

ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவுக்கும் கிடைக்கும் வாக்குகளின அடிப்படையில் அந்தக் கட்சியில் அல்லது குழுவின் வேட்பாளர் பட்டியலில் இருப்போர் வெற்றியீட்டிய உறுப்பினர்களாக அறிவிக்கப்படுவதும் - தெரிந்தவையே.

புதிதாகக் கொண்டுவரப்படும் திருத்தச் சட்டங்களின் கீழ் -

★ மேயர்கள், நகர மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்களைத் தெரிவு செய்வதற்காகத் தனியான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

★ அதேசமயம் சபைகளின் உறுப்பினர்கள் - முன்னைய காலத்தில் நடைமுறையில் இருந்தது போன்ற - வட்டார ரீதியாக நடைபெறும் தேர்தல்களில் இருந்து வட்டாரத்துக்கு ஒருவர் என்ற முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். (உ)

## யாழ். - வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வெளியகல்வீப் பாதைகள் அமைவதைப் புலிகள் விரும்பலாம் எனத் தெரிகின்றது.

நோர்வேத் தலையீட்டுடன் தரைப் பாதை திறப்பதற்கான இணக்கம் ஏற்பட்டதும், இப்பிரதேசங்களில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் மற்றும் நிலக்கண்ணிகள், வெடிகுண்டுகள் ஆகியவற்றை அகற்றலாம் என்று புலிகள் கருதுவதாகவும் தெரிகின்றது.

வடக்குக்குத் தரைவழிப் பாதை ஒன்றைத் திறப்பது அரசியல் ரீதியான ஒரு வெற்றி என தெற்கு அரசியல்வாதிகள் மற்றும் அரசத் தலைவர்கள் மட்டத்தில் கருத்து நிலவுவதாகவும் தெரிகின்றது. (உ)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தத்தை நீடிக்கும் பட்சத்தில் இந்தத் தடைநீக்கமும் நீடிக்கப்படும் எனவும் கடற்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

பாரம்பரியமாக இந்தக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த மீனவர்களுக்கு இப்பகுதியில் மீன்பிடிக்கக் கடற்படையினர் அனுமதிப் பத்திரங்களை வழங்கியுள்ளனர். (ம-6)

### சஞ்சீவி அபிமானிகளுக்கு...!

உங்கள் 'சஞ்சீவி' வார இதழ் புதுப்பொலிவுடன் மீண்டும் விரைவில் வெளிவரவுள்ளது.

அதில் நீக்கப்படவேண்டிய, சேர்க்கப்படக்கூடிய அம்சங்கள், புதிய பகுதிகள் குறித்து உங்கள் எண்ணங்களை எமக்கு அறியத்தாருங்கள்.

கருத்தாழம் மிக்க கடிதங்கள், தகவல்கள் உதயனில் பிரசுரிக்கப்படும். அதன்மூலம் கருத்துப் பரிமாற்றங்களுக்கும் வாய்ப்புக் கிட்டும்.

உங்கள் ஆலோசனைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
'உதயன் - சஞ்சீவி',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


நாளைய உதயனுடன்

இலவச இணைப்பு

Institute Of Informatics Studies

நிறுவனம் வழங்கும்

முவர்ண நாள்காட்டி

(C/20049)



இன்றே விஜயஞ் செய்யுங்கள்!

உங்களுக்குத் தேவையான

❖ கொப்பி வகைகள் ❖ கடதாசிகள்

❖ அச்சக பாவனைக்குகந்த மை வகைகள்

❖ பாட உபகரணங்கள்

❖ அலுவலக பாவனைப் பொருள்கள் முதலியவற்றை

சில்லறையாகவும் மொத்தமாகவும் நீதியான பெறுமதியுடன் நீங்கள் பெற்றுக்கொள்ள

அற்புதா ரேடிங் கொம்பனி

இல. 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/20058) (பஸ் நிலையம் முன்பாக)



அழகிய பரிசில்கள் காத்திருக்கின்றன

REX போட்டோ ஸ்ரூடியோ

ஸ்தாபனத்தினரின் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி! எதிர்வரும் 01-01-2002 முதல் 15-01-2002 வரை எம்மிடம் புகைப்படம் எடுப்பவர்களுக்கு அழகிய பரிசுகள் காத்திருக்கின்றன. உடன் இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

REX போட்டோ ஸ்ரூடியோ

606 (918), K.K.S. Road, T.P-0213384

(96381) நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.



முதல் முறையாகத் திறந்தவெளி அரங்கில்

யாழ். முன்னணி இசைக் கலைஞர்களுடன் யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட பாடகர்களும் இணைந்து வழங்கும்

மாபெரும் இசைவிருந்து

உதய கீதங்கள்

(யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயற்பாட்டு நிதிக்காக)

இடம் : யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானம்

காலம் : நாளை (31.12.2001) திங்கட்கிழமை நேரம் : மாலை 6.00 மணி

இவ்வருடத்தின் இறுதி நாளில் இசையுடன் சங்கமிக்க,

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள்.

விளம்பர அனுசரணை: மகாநதி புடவையகம்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(96475)


### முக்கிய அறிவித்தல்

### அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள எமது சங்கத்தினால் நடத்தப்பட்டுவந்த கற்பகம் பனம்பொருள் விற்பனை நிலையமும், மதுபான விற்பனை நிலையமும் 20.03.2001 இல் இருந்து மூடப்பட்டுள்ளன. தற்போது நடத்தப்படும் இந் நிலையங்களுக்கும் எமது சங்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

தலைவர்,
அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம். (96375)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.